
நன்றி - நூலகத்திட்டம்


# சரிநிகர்

சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே — பாரதி.


குகமூர்த்தியை விடுதலை செய்!



இதழ்: 7 பெப்ரவரி/மார்ச் 91 விலை: 5/=



# எப்ப இதெல்லாம் தீரும்

எல்லாம் வழமைப்படி இருப்பதைப் போலிருந்தது. பிள்ளைகள் பாடசாலைக்குப் போய்க்கொண்டிருந்தார்கள். ஊழியர்கள் தத்தமது அலுவலகங்களுக்குப் போய்க் கொண்டிருந்தார்கள். கூடவே மக்களும் தத்தமது அலுவல்களுக் கா கப் பறந்து கொண்டிருந்தார்கள். எல் லாம் சைக்கிளில் தான்.

யாழ்ப்பாணத்தின் முத்திரைச் சந்தியிலிருந்து சாவகச்சேரி, பருத்தித்துறை, காரைநகர் போன்ற இடங்களுக்கு ஒன்றோ, இரண்டு தனியார் மினிபஸ் சேவையைத் தவிர வேறு போக்குவரத்துச் சேவைகள் எதுவும் இல்லை. போக்குவரத்துக் கட்டணம் கூட ஐந்தோ, ஆறு மடங்கு அதிகம்.

எங்களைத் தாண்டி 'சாளி' மோட்டார் சைக்கிள் ஒன்று சென்றது: மண்ணெண்ணெய் நெடியுடன். என்னுடன் வந்து கொண்டிருந்த வயோதிபர் சொன்னார்: இதெல்லாம் போர்க்காலத் தொழில் நுட்பம் பாருங்கோ: பெற்றோல் விக்கிற விலையிலை பெற்றோல் விட்டு ஓடேலுமே: இப்ப இங்கை எல்லா வாகனங்களும் மண்ணெண்ணெயில தான் ஓடுது. மண்ணெண்ணெய் எண்டா சும்மாவே போத்தல் 120 ரூபா. இந்த விலையிலை வாங்கி தோட்டத்துக்கு இறைக்கிற தெங்கை, விளக்கெரிக்கிற தெங்கை. தோட்டம் துர வெல்லாம் காடு வத்திப் போய்க் கிடக்கு. கறண்ட் இல்லை, மண்ணெண்ணெ இல்லை. பசளை இல்லை. பத்தாததுக்கு ஹெலிக் காரன் கறுப்புத் தலையைக் கண்டாலே காக்கை குருவி சுடுற மாதிரியெல்லே சுட்டுத்தள்ளுறான்."

கான்டிலை இறுகப் பற்றியபடி எங்கே ஏதாவதொன்றுடன் இடித்து விடுமோ, யாருடனாவது மோதி விடுவோமோ என்கிற மாதிரி பெண்மணி ஒருவர் சைக்கிளில் வந்து கொண்டிருந்தார். 45 வயதிருக்கும் தோளில் கைப்பை தொங்கியது. ஏதோ அலுவலகத்தில் வேலை செய்பவராக இருக்கும். கிழவரே சொன்னார். " தம்பி என்ன புதினமாய் பார்க்கிறீர் இதொண்டும் புதினமான விசயமில்லை. பெடியள் எல்லாரையும் கட்டாயம் வேலைக்கு வரச் சொல்லிப் போட்டாங்கள். பஸ்,மினிபஸ் ஒண்டும் இல்லை. வேறை வழி? ஓடத் தெரியா தாக்கும் புதிசாப் பழகினது தான்.

நகரில் குண்டுத் தாக்குதலுக்குள்ளா காத கட்டிடம் என்று எதுவும் இருப்ப தாகத் தெரியவில்லை. ஒளவையார் சிலையின் தலையைக் காணவில்லை. அம்சாமூர்த்தி தலைகீழாகத் தொங்கிக் கொண்டிருந்தார். வள்ளுவரும் கூட ஏட்டையும் எழுத்தாணியையும் இழந்து.. புஜங்களுடன் இரண்டு கைகளையுமே காணவில்லை. உடல் முழுக்கக் காயங்கள்: குருதி இருந்தால் தானே வழிவதற்கு, உறைந்து போயிற்றாக்கும்.!

"கடந்த ஜூனில் சண்டை தொடங்கியதிலிருந்து ஏறத்தாழ 2000 பேர் கொல்லப்பட்டிருக்கிறார்கள், ஏராளமானோர் காயமடைந்திருக்கிறார்கள். பெருமளவான மரணங்கள் போதுமான வைத்திய வசதி இல்லாததாலேயே நடந்திருக்கிறது. மிகச் சாதாரணமான மருந்துகளைக் கூட கொண்டு வருவதற்கு அரசு தடை விதிப்பதால் தனியார் வைத் தியசாலைகள் கூட இயங்க முடியாத நிலை. மக்கள் எல்லா வருத்தத்திற்கும் ஆஸ்பத்திரிக்கே வருகிறார்கள்: ஆஸ்பத் திரியோ மிகக் கடுமையான நோய்வாய்ப்பட்டவர்களுக்கே முன்னுரிமை கொடுக்கிறநிலை. சாதாரண காய்ச்சலுக்கு கடைகளில் பனடோல் இல்லை. கொத்தமல்லிச் சரக்கே, பதினைந்தே இருபது ரூபா விற்கிறது. என்றார் அரச அலுவலகஅதிகாரி ஒருவர்.

ஒப்பறேஷன் லிபரேஷனின் போது இந்தியா வந்து தலையிடும்: பிரச்சினையைத் தீர்க்கும் என்று நம்பிக்கை இருந்தது. ஆனால் இந்தியப் படை வந்து மோதல் தொடங்கினதற்குப் பிறகு அந்த நம்பிக்கையும் இல்லாமல் போய் விட்டது. இப்போதோ புலிகள் முன்னரை விடப் பலமாக இருக்கிறார்கள், கோட்டை, கொக்காவில், மாங்குள முகாம் தாக்குதலுக்குப் பிறகு ஒன்று தெரிகிறது. இலங்கைப் படை முன்னேறுவதற்கான வாய்ப்புக்கள் மிகக் குறைவு என்று. ஆனால் இவ்வளவு கஷ்டத்தையும் சுமந்து கொண்டு எவ்வளவு காலத்துக்குத் தான் வாழ்வது? இந்தியா திரும்பவும் தலையிட்டு பிரச்சினையைத் தீர்த்தால் நல்லது தான். ஆனால் அந்த நம்பிக்கையும் சுக்லா வந்து போனதற்குப் பிறகு இல்லாமற் போய்விட்டது, என்றார் நடுத்தர வர்க்க அரச ஊழியர் ஒருவர்.

வ. கிகள் இயங்குகின்றன. ஆனால் வங்கிகளில் பணம் இல்லை. எப்போதாவது இருந்து விட்டு சம்பளம் அல்லது பென்ஸன் கொடுப்பார்கள். அதுவும் வங்கியில் பணம் இல்லாததால் பகுதிக் தொகையே வழங்கப்படுகிறது.

" குண்டு போடும் போது பள்ளிக் கூடங்கள், அலுவலகங்கள் என்று எதுவும் பார்ப்பதில்லை. இதனால் பாடசாலைகள் ஒழுங்காக இயங்க முடிவதில்லை. கடந்த ஒகஸ்ட்டில் நடக்க வேண்டிய உயர்தரப் பரீட்சையோ டிசம்பரில் நடக்க வேண்டிய சாதாரண தரப் பரீட்சையோ நடக்கவில்லை. இதனால் அடுத்து என்ன செய்வதென்று தெரியாத மாண வர்கள் புலிகளுடன் சேர்ந்து கொள்கிறார்கள் அதைத் தவிர வேறுவழி அவர்களுக்கில்லை" என்றார் கல்வித்துறை அதிகாரி ஒருவர்.

" கொஞ்சம் பொறும் தம்பி என்று சொல்லிக் கொண்டே ஓட்டமும் நடையுமாக விரைந்த கிழவர் வளைந்து நெளிந்து அரைமைல் நீளத்திற்கு நீண்டிருந்த கியூவில் போய் நின்று கொண்டார் பின்னால் சென்று கிழவரிடம் கேட்டேன் கடையில் என்ன கொடுக்கிறார்கள் என்று. கிழவர் சொன்னார். " என்னெண்டு தெரியேல்லை. எதெண்டாலும் வாங்கிக் கொண்டு போவம் " என்றார். பின்னர் விசாரித்ததில் தெரிந்தது சொப்பிங் பாக்கில் கால் போத்தல் தேங்காய் எண்ணெய் கொடுக்கிறார்கள் என்று. கிழவர் அலுத்துக் கொண்டார்." அரிசிக்கும் கியூ, சீனிக்கும் கியூ. எண்ணெய்க்கும் கியூ, ஒரு கட்டி சவுக்காரத்துக்கும் கியூ. இந்தக் கியூ வாழ்க்கை முடியுதோ இல்லையோ எங்கடை ஆயுள் முடிஞ்சு போகும்."

இந்தக் கியூவிலை நிண்டும் என்ன சும்மாவே தாறாங்கள்: எல்லாம் ஆனை விலை, குதிரைவிலையெல்லே, அன்றாடம் கூலி வேலை செய்து வந்த ஒரு பெண் கூறுகிறார்: "நாங்கள் எதிர் காலத்திற்கு என்று எதையும் சேமித்து வைக்க வில்லை. சேமித்து வைக்கவும் எங்களால் முடியவில்லை. தொடர்ந்த யுத்தமோ முகாம் பகுதியிலிருந்து எங்களை விரட்டி விட்டது. அரச நிவாரணமோ மாதத்திற்கு ஒரு தடவை கொஞ்சம் அரிசி, பருப்பு, சீனி என்று தருவார்கள். ஏழு பிள்ளைகளைக் கொண்ட குடும்பத்திற்கு எப்படிப் போதும்? வேறை தொழில் இல்லை: வருமானம் இல்லை, ஒரு நாளைக்கு ஒரு வேளை என்பதே மிகக் கஷ்டமானது தான். மற்றப் பிள்ளைகள் காலையில் பள்ளிக்குப் போவார்கள், நானோ பிள்ளைகள் காலையில் எழுந்ததும் எங்கா வது ஒரு கியூவிற்கு அனுப்புவேன் ஏதா வது வாங்கிவர. அதுவும் கிடைத்தால் தானே. என்னுடைய இரண்டாவதும், மூன்றாவதும் பையனும், பெண்ணும் புலிக்குப் போய் விட்டார்கள்: என்னால் தடுக்க முடியவில்லை. பயமாகத் தான் இருக்கிறது அவர்களுக்கு ஏதாவது நடந்து விடுமோ என்று. ஆனால் என்னுடன் இருந்தால் அவர்கள் பட்டினியாலேயே இறந்து விடுவார்கள் என அஞ்சுகிறேன்." கண்கள் கலங்கி பேச முடியாமல் தடுமாறியபடி. என்னைக் கேட்டார். " எப்ப இதெல்லாம் தீரும்?"

நன்றி - நூலகத்திட்டம்



# மெல்லத் தமிழினி...

தமிழர்களுக்கும் தற்கொலைக்கும் அப்படி என்ன நெருங்கிய உறவு இருக்கிறது? இரண்டு சொற்களும் "த" என்பதில் ஆரம்பமாகின்றது என்பதை விட வேறொரு ஒற்றுமையும் பெரிதாக இல்லை என்றான் நண்பன். (அவன் ஒரு பொறியியலாளன் எனினும் கொஞ்சம் கவிதைப் பித்து, எதுகை, மோனையில் சொக்கிப் போய் "ஆஹா" என்று உருகி விடுகிற ரசிகப் பாரம்பரியம்!)

அரை குறைச் சமூகவியல் ஞானம் வாய்க்கப் பெற்ற எனக்கு அவனுடைய பதிலில் திருப்தி வராதது நியாயம் என்பதை நீங்கள் இதனை வாசித்து முடிக்கும் போது உணர்வீர்கள். "சுதந்திரம்" இலங்கைக்குக் கிடைத்து இரண்டு வருடங்களிலிருந்து 1975 வரை பொதுவாகவே இலங்கையின் தற்கொலை வீதம் ஒவ்வொரு ஒரு லட்சம் பேருக்கும் 6.1 என்பதில் இருந்து 22.1 ஆக உயர்ந்துவிட்டது. இந்தப் புள்ளி விபரங்கள் 1975 உடன் ஆய்வுக்கு உட்படாமல் நின்று போனது ஒரு சோகம். முதலாவது சயனைட் தற்கொலை சிவகுமாரன் மூலம் அந்த வருடம்தான் நிகழ்ந்தது. அது வேறு விஷயம் இல்லையா?

"தர்க்கைம்" என்கிற பிரபல சமூகவியலாளர் "தற்கொலை" பற்றி செய்த பிரமாதமான ஆய்வு ஒருபுறமிருக்க வவுனியா, யாழ் மாவட்டங்கள்தான் அன்றிலிருந்து இன்று வரை உயர்ந்த தற்கொலை வீதங்களைக் காட்டி நிற்கிறது. 1970களில் ஒவ்வொரு 10 மரணங்களிலும் ஒன்று, வவுனியா மாவட்டத்தில் தற்கொலையாக இருந்துள்ளது. உயர்ந்த பட்ச தற்கொலை வீதத்தில் வவுனியா, யாழ்ப்பா ணம் , மன்னார், திருகோணமலை மாவட்டங்கள் ஏனைய எல்லா மாவட்டங்களையும் விட (பொலநறுவை தவிர) முன்னணியில் இருப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. தற்கொலைத் தோற்றப்பாட்டின் அடியில் சமூக நிலைமைகளுக்கு ஒரு பங்கு உண்டு என்பதை வலியுறுத்தும் அதே வேளை தனி நபரின் மனோநிலைக்கும் ஒரு பங்கு உண்டுதான் என்பதும் புரிந்து கொள்ளக் கூடியதுதான். ஆனால் புரியாத விஷயம் இந்த யாழ்ப்பாண மனிதர்கள். 1950 இலிருந்து 1975 வரை "தமிழ் பெருங்குடி மக்களின் இதயமான யாழ்ப்பாணத்தின் (குவலயத்தின் கண் போன்ற யாழ்ப்பாணம் என்ற மாதிரி பாரதி வேறு ஏதோ சொல்லித் தொலைத்து விட்டிருக்கிறான்) தற்கொலை வீதம் தொடர்ச்சியாக அதிகரித்து வந்துள்ளது. 1955 இல் 13.1 ஆக இருந்தது 1975 இல் 43.5 ஆகி விட்டது! முழு இலங்கையின் வீதத்தை விட இது மூன்று மடங்கு அதிகமாக இருந்தது. இது யாழ்ப்பாணத்துத் தமிழ்ச் சமூகத்தின் சில சமூக- கலாசார பரிமாணங்களைச் சுட்டுவதாக அமையக் கூடும். சாதாரணமாகவே மாற்றம் விரும்பிகளாக இராத ஆனால் எளிமையான வாழ்வு முறையும் சமூக-கலாசர்ரப்பண்புகளும் இந்தத் தற்கொலை அதிகரிப்பு வீதத்தை விளக்கப் போதுமானவையல்ல.

கல்விக்கும் தொழின் முதன் மைக்கும் எப்போதுமே அதி சிறப்பான இடத்தை வழங்கி வந்த ஒரு சமுதாயத்தில் கல்வியில் ஏற்பட்டுள்ள போட்டிகள், பழமை வாய்ந்து, வீச்சற்றுப் போன கல்வி முறையின் விளைவான சோதனைகள் சித்தியடைய வேண்டிய, சித்தியடையாத Tension மற்றும் தொழில் வாய்ப்புகளுக்கான போட்டி போன்ற அம்சங்களில் இந்தத் தற்கொலை அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது என விளக்கம் கொடுத்தாலும் அடிப்படையில் இறுக்கமானதும் நெகிழ்ச்சியற்றதுமான சமூக கலாசாரக் கட்டமைவு ஒரு முக்கிய காரணியாகும்.

யாழ்ப்பாணத்தைதான் விட்டால், வவுனியாவின் "அடங்காத் தமிழர்களுக்கு" என்ன வந்தது? ஒரு பக்கம் உயர்ந்த தற்கொலை வீதமும் மறுபுறம் புலம் பெயர்ந்த மனிதர்கள் எண்ணிக்கை கூடுவதும் வவுனியா மாவட்டத்தின் ஒரு அம்சம். வவுனியாவின் உயர்ந்த தற்கொலை வீதத்துக்கு தற்கொலையின் தமிழ்ப் பண்புதான் காரணமா அல்லது புலம் பெயர்ந்தோர் - தமது முன்னைய இடம், வாழ்வு பற் றிய கழிவிரக்கத்தின் காரணமாகவும் தனிமை, துணையற்றமை போன்ற உளவியல் காரணிகளாலும் தானா என் பது முடிவாகத் தெரியாது. இந்த தற்கொலை வீத அதிகரிப்பு இருபாலாருக்கும் பொது என்பதோடு காதோடு காதாக ஒரு விஷயம் - சயனைட் விஷயம் இந்த ஆய்வுக்குள் அடங்காது! அதனையும் சேர்த்து 1975ற்குப் பிற்பாடு ஆய்வு செய்ய யாராவது விரும்பினால் நல்லதுதான். எனினும் இப் போதைக்கு சமூகவியலுக்குள் அரசியல் கலக்கக்கூடாது பாருங்கோ!



யாழ்ப்பாணத்தின் பிரதான வியாபார நிலையமொன்றின் கொழும்பு அலுவலகத்தின் முன்பாக நடந்து சென்று கொண்டிருந்த போது ஒரு தடவை எனது நண்பர் ஒருவர் இவ்வாறு தெரிவித்தார்.

" போன முறை இவையள் அனுப்பிய 15 மோட்டார் சைக்கிளும் பெடியள் வாங்கியிட்டாங்களாம். "

"காசு குடுத்திருப்பாங்களோ" என்று கேட்டேன் நான்.

நண்பர் சிரித்துக் கொண்டு சொன்னார், "அவங்கள் குடுத்திருந் தாலும் இவன்கள் வாங்கியிருக்க மாட்டாங்கள், அவங்களை கையுக்கை போடவெண்டே சும்மா குடுத்திருப்பாங்கள்."

இந்த உரையாடல் எனக்கு எனது சமூகவியல் நண்பர் ஒருவர் சொன்ன சில தகவல்களை திடீரென ஞாபகத்திற்குக் கொண்டு வந்தது. யாழ்ப்பாணத்தின் சமூகவியல் போக்குபற்றி அவரது அவதானிப்புக்களில் இருந்து அவர் உருவாக்கியிருக்கும் சில கருத்துக்களை ஒருதடவை அவர் எனக்குச் சொல்லியிருந்தார்.

யாழ்ப்பாணத்துக்கு சுயம் என்று ஒன்றும் கிடையாது. இந்த "'யாழ்ப் பாணத்தான்' என்று நான் சொல்லும் போது அது ஒரு குறியீடு மாதிரி, ஒரளவு படித்த மத்திய தரவர்க்கத்து உத்தி யோகம்பார்க்கிற ஆள் ஒருவரை எடுத்தால் அவர் தான் சரியான typical.

'சார்ந்ததன் வண்ணமாய்' (உமாபதி சிவாச்சாரியார் சொல்லும் ஆன்மா போல) நிற்கிற தன்மை இவனுக்கு இயல் பாகவே உருவாகி விடுகிறது. ஆனால் அதே வேளை சுயம் இல்லை என்றும் சொல்ல முடியாது. அவனது சுயம் என்னவென்றால் தனது சொந்த (சுய) நலன்களை நிறைவேற்றிக் கொள்ளத் தக்கவிதத்தில் யாரையும் எதையும் சார்ந்து நிற்பான்....

தனது சுய கௌரவம் தன்மதிப்பு என்பவற்றினை விடவும் அவனுக்கு தனது சுயநலம் முக்கியமானதாகப் படுகிறது. அதற்கேற்ற விதத்தில் யாருடனும் அவன் ஒட்டிக்கொள்ளவும் விடுபட்டுக் கொள்ளவும் செய்வான்......

இதை விளக்க அவர்இன்னொரு உதாரணம் சொல்கிறார்:

யாழ்ப்பாணத்தான் கொழும்பில் சிங்களவன் மாதிரியே சிங்களம் பேசுவான். மட்டக்களப்பில் மட்டக்களப்புத் தமிழும் இந்தியாவில் இந்தியத் தமிழும் பேசுவான். இப்போதும் அந்நிய நாட்டில் அன்னிய மொழியை அவர்களைப் போலவே பேசுவான்.

யாழ்ப்பாணத்தில் பல ஆண்டுகள் வாழ்ந்த ஒரு சிங்களவனே, அல்லது தமிழ் நாட்டுக்காரனே யாழ்ப்பாணத் தமிழைபேசுவதில்லை. ஆனால் யாழ்ப் பாணத்து தமிழனே தான் தனது மொழியை விட்டுவிட்டு அவர்களது மொழியையே பேசிவிடுகிறான்.

ஒரு முறை தமிழ் நாட்டில், இந்த சமூகவியல் நண்பரை சந்தித்த ஒருவர் 1/4 மணி நேரம் உரையாடிய பின்னர் தான் அவர் யாழ்ப்பாணத் தமிழர் என இவர் புரிந்துகொண்டாராம். அதுவரை அவர் தமிழ் நாட்டுக்காரரைப் போலவே பேசிக் கொண்டிருந்தாராம். அதே உச்சரிப்பு, அதே பாவனை.

இப்படி இயல்பாகவே பிற மொழியை தன் மொழி போலப் பேச மாறிவிடுவது ஒன்றும் லேசானதல்ல. இது ஒரு இனத்தின் சமூகவியல் பின்னணி யோடு சம்பந்தப்பட்டது என்றார்.

இலங்கை அரசாங்கம் இருந்த போதும் சரி, பிறகுஇந்தியப்படை வந்த போதும் சரி, பிற இயக்கங்கள் அதிகாரம் செலுத்திய போதும் சரி, அவர்களுக்கு ஏற்றவிதத்தில் வளைந்து கொடுப்பதன் மூலம் தங்களை பாதுகாத்து வருகிற சீவனாகவே இந்த யாழ்ப்பாணத்தான், இருந்து வந்திருக்கிறான்.

இவனுக்கு சரி பிழை முக்கியமில்லை. நியாயம், அநியாயம் முக்கியமில்லை . லாப நட்டம் தான் முக்கியம்.

இவன் அரசுக்கு வரி கொடுப்பான், ஆறாவது திருத்தத்துக்கு சத்தியப்பிரமாணம் செய்வான், தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கு ஆதரவு தருவான், நிதி உதவி செய்வான், இந்தியப்படைக்கும், இந்தியாவுக்கும் கூட நான் எதிரியில்லை என்பான். எப்படியோ தனது இருப்பைப்பாதுகாத்துக் கொள் வான்.

இவனுக்கு பனைமரம் ஒரு போதும் 'சிம்போலாக' முடியாது.


யாழ்ப்பாணத்திற்கு எது சரியான தேசிய சின்னம் என்று என்னைக் கேட்டால் நான் தேவாங்கு அல்லது பச்சோந்தி என்று தான் சொல்லுவேன் என்றார் அவர்.

இந்தக் கடைக்காரர்களும், சில அரச உத்தியோகத்தர்களும் இப்படி ஒரு சமூகத்தைப்பற்றி அபிப்பிராயம் சொல்ல உதாரணமாக்கப்படுவது குறித்து எனது அதிருப்தியை தெரிவித்தேன். கடந்த பத்தாண்டுகட்டு மேலாக நடக்கும் ஆயுதப் போராட்டத்தைப்பற்றியும் சுட்டிக்காட்டினேன்.

அந்த சமூகவியல் நண்பர் சிரித்தபடி சொன்னார். 'அதுமட்டு மென்ன? சந்தர்ப்பத்துக்கு தக்கமாதிரிவளைந்து வளைந்து எப்படியோ தனது இருப்பை பாதுகாக்கும் போராட்டமாக இருக்கிறதல்லாமல் வேறுவிதமாக இருக்கிறதா என்ன ? பனங் கொட்டையிலிருந்து வடலி தான் முளைக்கும், வேறு ஒன்றும் முளைக்காது. எமது சமூகத்திலிருந்து இப்படி , ஒரு போராட்டம் தான் வரும்.... என்றார் அவர். எனக்கு உடனடியாக ஒரு பதிலும் தோன்றவில்லை.

இப்போது இந்த மோட்டார் சைக்கிள் விநியோகம் பற்றிய கதை வந்ததும் எனக்கு உடனே இது ஞாபகம் வந்தது. தமிழரசுக் கட்சி முதல் இன்றுள்ள புலிகள் வரை அனைவருக்கும் கொடுத்து கொடுத்தே அது பெரிய விருட்சமாக வளர்ந்து நிற்கிறது என்பதையும் நண்பர் சொன்னதையும் என்னால் ஒப்பிட்டு பார்க்காமல் இருக்க முடியவில்லை.

## துப்பாக்கிகளின் தேசம்



திரும்பவும் திரும்பவும்
விமானங்கள் வட்டமிடும்.
தீமுட்டைகளை உமிழ்ந்து
மேற் சென்று மறையும்

குண்டும் குழியுமாய்
எனது நிலம் பிளந்து
சிதறும்
செந்நீர்க் குளங்களிலே
சதைத்துகள்கள் கரையொதுங்கும்.

தேசம் குரலொடுங்கி
மெல்ல மெல்லச் சாகும்
மக்களோ
காரணங்கள் அறியாராய்
காவாகிக் கொண்டிருப்பர்

இழப்பதற்கு
உயிருமற்றுப் போனபின்னர்
எமது தேசம்
விடுதலை பெறு மென்று
அசரீரிகள் ஒலிக்கும்

அசரீரிகள் சேர்ந்து பின்
ஆட்சி ஒன்று அமைக்கும்
அரசுகட்டில் துப்பாக்கி
ஏறி அமர்ந்திருக்கும்.

போரும் திசையற்று
போராட்டமும் திசையற்றுப்
போனபின்னும் துப்பாக்கி
ஆட்சிசெய்யும் நாட்டுக்கு
சுதந்திர ஈழமென்று
அசரீரி குரலெழுப்பும்.

## காகிதப்புலிக்கு எழுதியது..

கொல்
குண்டுகளைப்போட்டுக்
கொழுத்து.

எண்ணைக்காக இரத்தத்தையும்
உன்
இருப்புக்காக குழந்தைகளையும்
பொசுக்கு

பாலை மண்ணில்
மனிதக் குருதியில் நீந்தி
ஊளையிடு.

முழு உலகினதும்
குரல்வளை மீது நின்றபடி
அமைதி பற்றிப் பேசு.

உனக்கும் உன்கூட்டத்தார்க்கும்
வெற்றி யென்று
கூச்சலிடு.

மூடனே.
ஒன்றை மட்டும் அறிவாய்
ஈராக்கை மட்டுமல்ல
வரலாற்றின் பக்கத்தில்
ஒரு எழுத்தைக் கூட
உன்னால்
வெல்லமுடியாது.!

யுதிஷ்ட்ரா -

நன்றி - நூலகத்திட்டம்




இது விடுதலைப் புலிகள் அரசிற் பொறுப்பாளர் யோகரட்ணம் யோகி பெப் 8ம் திகதிய இலண்ட் இதழுக்காக அதன் நிருபர் ஃபிரா ங்கின் ரவிராஜ் இற்கு யாழ்ப்பா ணத்தில் வைத்து வழங்கிய பேட்டி.

கடந்த ஜூனில் அரசு-புலிகள் யுத்தம் மீள ஆரம்பமானதைத் தொடர்ந்து யுத்தத்தை முதலில் ஆரம்பித்தவர்கள் யார்? ஏன் என்ற கேள்விகள் தொடர்பாக பல வேறுபட்ட அபிப்பிராயங்கள் தெரிவிக் கப்பட்டு வருகின்றன.

இவ்வபிப்பிராயங்கள் தொடர் பான புலிகளின் கருத்தாகவும், காலத்தின் பதிவாகவும் இப் பேட்டி இருப்பதனால் தமிழாக் கித் தரப்படுகிறது இங்கே:

# யுத்தத்தைத் துவக்கியது அரசே....

- யோகி -



**கேள்வி:** அரசு-புலிகள் பேச்சுவார்த் தையில் நம்பிக்கை இழந்ததனாலேயே யுத்தத்தை ஆரம்பித்ததாக புலிகள் சொல்கிறார்கள். அப்படியானால் உங் களது எதிர்பாராத ஒரு தலைப்பட் சமான யுத்தநிறுத்தத்தின் நோக்கம் என்ன?

**பதில்:** நாங்களே போரை ஆரம்பித்ததாக அரசு சொல்லி வரு கிறது. ஆனால் உண்மையில் அரசு தான் யுத்தத்தை ஆரம்பித்தது. எவ்வா றெனில் இந்திய இராணுவம் வெளியே றியதும் அவர்கள் உடனடியாகச் சமூக விரோதக் குழுக்களுடன் பேச ஆரம்பித் தார்கள். இந்தக் குழுக்கள் அகதிகள் என்ற பெயரில் கொழும்பில் தங்கு வதற்கு இடவசதி வழங்கப்பட்டிருந்தது. இவர்கள் படையில் சேர்க்கப்பட்டு உள வாளிகளாக அனுப்பப்பட்டார்கள். இது பற்றிக் கூட நாம் அந்த நேரம் ஜனா திபதியிடம் தெரிவித்தோம். அப்போது அவர் அதை மறுத்த போதும், இப் போது அது அனைவருக்கும் தெரிந்த விடயமாகிவிட்டது. அவர் (ஜனாதிபதி) ஒப்புக்கொண்ட இன்னொரு விடயம் குடியேற்றங்களை நிறுத்துவது. ஆனால் குடியேற்றமோ தொடர்ந்து கொண்டி ருந்தது. அவர் ஆறாவது திருத்தச் சட்டத்தைத் திருத்தவும் வடக்கு கிழக் கின் அன்றைய மாகாணசபையைக் கலைத்து, புதிய தேர்தலை நடாத்தவும் ஒப்புக் கொண்டார். ஆனால் இந்திய இராணுவம் வெளியேறியதும்அன்றைய நிலைமைகள் இவற்றை நடைமுறைப் படுத்தச்சாத்தியமானவையாக இல்லை என்று சாக்குப் போக்குச் சொன்னார் கள். மிகச் சாதாரணமான- நாம் நீண்ட நாட்களாகச் செய்து வரும் வரிவசூ லிப்புப் போன்ற - சிறிய விடயங் களையிட்டு எதிர்க்கட்சிகள் அதிருப்தி யுடன் இருப்பதாகத் தெரிவித்தார்கள். இதனால் தங்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை என்றார்கள்.

உதாரணமாக, எதிர்க்கட்சிகள் ஜனா திபதியை ராஜினாமாச் செய்யச் சொல் லியோ அல்லது பாராளுமன்றத்தைக் கலைக்கச் சொல்லியோ கேட்டால் இதை இவர்கள் ஒரு சீரியஸான விசய மாகக் கருதுவதில்லை, ஆனால் ஒரு தமிழ்ப் பிரச்சினை என்று வரும் போது, அரசு தான் அதை மிகவும் சீரியஸாக எடுத்துக் கொண்டு தமிழ் மக்களுக்கு ஒப்புக் கொண்டதை நடைமுறைப்படுத்தாமல் விட்டு விடு கிறது மேலும் ஜனாதிபதி அன்றைய கவர்னரை நீக்கி ஒரு தமிழரை கவர் னராக நியமிக்கவும் ஒப்புக் கொண் டார். திருகோணமலையில் உள்ள அர சாங்க அதிபரை மாற்றி ஒரு தமிழரை அரசாங்க அதிபராக நியமிக்கவும்

அரசு ஒப்புக் கொண்டது. நான் முன்னரே சொன்னது போலவே ஜனா திபதி எல்லா விடயங்களையும் நடை முறைப்படுத்த காலம் பொருத்தமாக இல்லை என்று கூறித் தட்டிக் கழித்து விட்டார்.

நாம் ஒரு மாகாண (தமிழ் பேசும்) பொலிஸ் படையை அமைக்கவும், அது வரையும் அரசு எந்தப் பொலிஸ் நிலை யங்களையும் திறக்கக் கூடாது எனவும் ஒரு உடன்பாட்டிற்கு வந்திருந்தோம். சிங்களப் பொலிஸார் சிங்களப் பகுதிக ளில் வேலை செய்யலாம் என்றும் ஜனா திபதியிடம் கூறியிருந்தோம். ஆனால் அரசு மேலும், மேலும் அதிகளவில் சிங்களப் பொலிஸாரையும், முன்னால் முஸ்லிம் ஊர்காவல் படைகளையும் மட்டக்களப்பு, திருகோணமலை, அம் பாறைப் பகுதிகளுக்கு அனுப்பியது. பெரும்பாலான இப் பொலிஸார் சாதாரண பொலிஸார் அல்ல. அவர் கள் S.T.F.இலிருந்து வந்தவர்களாகவும் பெருமளவில் ஆர்.பி.ஜி, ஏ.கே, எல்.எம்.ஜி போன்ற சக்தி வாய்ந்த ஆயு தங்களைத் தாங்கியவர்களாகவும் இருந் தார்கள். ஆகவே சந்தர்ப்பம் வரும் போது இந்தப் பொலிஸ் நிலையங்களை இராணுவ முகாம்களாக மாற்றுவதும், அதுவரை ஆயுதங்களை வாங்குவதும், முப்படைகளையும் பலமாகக் கட்டியெ ழுப்புவதுமே அரசின் நோக்கமாக இருந்தது என்பதை உணரக் கூடியதாக இருந்தது. இன விகிதாசார அடிப் படையில் தமிழர்களையும் முஸ்லிம்களை யும் படையில் சேர்ப்பதாக 'அரசு ஒப்புக் கொண்டிருந்தது. உண்மையில் அரசு என்ன செய்திருக்க வேண்டு மென்றால் மேலும் மேலும் அதிகளவில் சிங்களவரை ஆயுதப்படைக்கு எடுப் பதை நிறுத்தியிருக்க வேண்டும். அடுத்த பிரச்சினை என்னவென்றால் எமது தலைமை அலுவலகம், மற்றும் அலுவலகங்களுக்கு மேலாக வேவு விமானங்களைப் பறக்க விடத் தொடங் கியதாகும்.

மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்தில் எமக்கு நிறையப் பிரச்சினை இருந்தது. அரசாங்கம் மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்திலிருந்த முழுச் சிங்களப் பொலிஸாரையும் மீளப் பெறுவதாக ஒப்புக்கொண்டது. ஆனால் நடந்ததோ மேலும் அதிகளவில் சிங்களப் பொலி ஸாரை அங்கு அனுப்பியது தான். அங் கிருந்து தான் பிரச்சினை ஆரம்ப மாகியது.

அரசாங்கத்திற்கு நாட்டில் அமைதி நிலவுவது தேவையாக இருக்கவில்லை. ஏனென்றால் அவர்கள் 60000 சிங்கள வர்களைத் தெற்கில் கொலை செய்திரு ந்தார்கள். அத்துடன் பல பொருளா தார மற்றும் பிற சிக்கல்களுக்கு அது

முகம் கொடுக்க வேண்டியிருந்தது. ஆனால்அவற்றிற்கு முகம் கொடுக்கத் தயாரில்லாத இவர்கள், யுத்தத்தை நடாத்துவதன் மூலம் சிங்கள மக்களின் கவனத்தைக் குறைந்தளவு காலத்திற்கா வது திசை திருப்ப முடியும் என நம்பி னார்கள்.

இந்த ஒரு தலைப்பட்சமான யுத்த நிறுத்தம் நாம் எப்போதும் பிரச்சினையைப் பேசித்தீர்க்கத் தயா ராக இருக்கிறோம் என்றும் அரசு தயாரற்று இருக்கிறது என்றும் உல கிற்கு எடுத்துக் காட்டும் நோக்கத்துட னேயே அறிவிக்கப்பட்டது. இதன் இன் னொரு நோக்கம் உணவு, மருந்துப் பற்றாக் குறையால் எமது மக்கள் - குறி ப்பாகக் கிழக்கில்-செத்துக்கொண்டிருக் கிறார்கள் என்பதையும், அரசு அரச சார்பற்ற நிறுவனங்களையோ, சர்வ தேச செஞ் சிலுவைச் சங்கத்தையோ அகதிகளுக்கு உதவி செய்வதற்கு, இது ஒரு யுத்தப் பிரதேசம் என அறிவித்து மறுத்து வரு கிறது என்பதையும் எடுத்துக் காட்டுவது. போர் நிறுத்தத்தை அறிவிப்பதன் மூலம் அரசின் உண்மை முகத்தைக் காட்ட முடியும். அவர்கள் மக்களுக்கு யார் உதவி செய்வதனையும் விரும்ப வில்லை. சர்வதேச சமூகம் அரச சார் பற்ற நிறுவனங்கள் எமது மக்களுக்கு உதவுவதற்கு அனுமதிக்குமாறு வற்பு றுத்துமென நாம் நம்புகிறோம்.

**கேள்வி:** அரசுடன் மீளப் பேசுவதா னால் எந்த விடயங்களைப் பற்றிக் குறிப் பாக நீங்கள் பேசுவீர்கள்?

**பதில்:** முதலாவதாக யுத்தத்தை நிறுத்துவது. ஆகவே நாம் யுத்த நிறுத் தத்தைப் பற்றிப் பேச வேண்டும். பிறகு எந்த விசயங்களைப் பற்றிப் பேசப் போகிறோம் என்பதில் உடன்பாடு காண வேண்டும். ஆகவே நான் மேலும் விரிவாக இப்போது பேச விரும் பவில்லை. ஏனென்றால், அது நிலவும் நிலைமையை மேலும் சிக்கலாக்கி விடும். ஒன்று மட்டும் நிச்சயம். அரசு கொஞ் சம் தீவிரமாக (radical) சிந்திக்க வேண் டும். அதே வேளை எதிர்க்கட்சிகளும் சிங்கள மக்களும் தமிழ் மக்களுக்கு ஒற்றையாட்சி முறையிலமைந்த அரசிய லமைப்புக்குள் தமிழ் மக்களின் சுயநிர் ணய உரிமை வழங்கப்படாதவரை இந் நாட்டில் அமைதி நிலவப் போவ தில்லை என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

**கேள்வி:** உங்கள் யுத்த நிறுத்தம் புலி கள் இராணுவத் தீர்வைக் கைவிடுவ தாகவும், இறுதி வரைக்குமான போர் என்பதைப் புலிகள் கைவிட்டு விட்டதா கவும் பொருள் கொள்ளப்படலாமா?

**பதில்:** யுத்தநிறுத்தம் நாம் எப்போதும் பேசுவதற்குத் தயாராக இருக்கிறோம் என்பதைக் காட்டுகிறது. அரசு தமிழ் மக்களைத் தொடர்ந்து கொல்லுமா னால் இன அழித்தொழிப்பிலிருந்து அவர்களைப் பாதுகாப்பதற்கு ஒரு தற் காப்பு யுத்தத்தைத் தொடர்ந்து நட த்து வதைத் தவிர வேறுவழி இல்லை எமக்கு. எமது மக்களின் 42 ஆண்டு கால வரலாற்றிலிருந்து சமாதான முறையிலான போராட்டங்களால் எமது உரிமைகளைப் பெற முடியாது என்று நாம் நன்றாக அறிவோம்.

**கேள்வி:** தென்னிந்தியாவில் புலிகளு க்கு எதிராக உருவாகியுள்ள மாற்றம் உங்களது இந்தப் போர் நிறுத்த முடி வுக்கு ஒரு காரணமாக இருக்கலாமா?

**பதில்:** கொஞ்சமேனும் இல்லை.

**கேள்வி:** சர்வதேச மேற்பார்வையா ளர்கள் முன்னிலையில் வடக்கு - கிழக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்தி னால் அதை எதிர் கொள்ளப் புலிகள் தயாராக உள்ளார்களா?

**பதில்:** என்னால் என்ன சொல்ல முடியும் என்றால் நாம் பேச்சுவார்த் தை நடத்திய போது நாம் வடக்கு கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் சர் வதேச பார்வையாளர்கள் முன்னி லையில் பங்குபற்றத் தயார் எனத் தெரி வித்திருந்தோம். ஆனால் வடக்கு, கிழ க்கு மாகாணசபை ஒரு இடைக் காலத் தீர்வே என்றும் அறிவித் திருந்தோம்.

**கேள்வி:** புலிகளுக்கு மக்கள் ஆதரவு கொஞ்சக் காலமாக இருப்பதற்கான சான்றுகள் தெரியவில்லையே, இது பற்றி என்ன சொல்லுகிறீர்கள்?

**பதில்:** புலிகளுக்கு மக்கள் ஆதரவு இருக்கிறது. எமக்கு அது இல்லா விட் டால் 18 ஆண்டுகள் எம்மால் நிலைத்து நின்றிருக்க முடியாது.

**கேள்வி:** உங்களது புதிய அணுகுமு றையை (போர்நிறுத்தம்) அரசு பாதக மான முறையில் அணுகினால் உங்க ளது அடுத்த நடவடிக்கை என்னவாக இருக்கும்?

**பதில்:** அரசு தாக்குதலைத் தொடங் கினால், மக்களை இன அழித்தொழிப் பிலிருந்து பாதுகாப்பதைத் தவிர எம க்கு வேறு வழி கிடையாது.

**கேள்வி:** ஈழத்திற்கான இராணுவத் தீர்வையே தொடர்ந்தும் புலிகள் கொண்டிருப்பார்களானால் எவ்வளவு காலத்திற்கு அப்படி ஒரு ஆயுதப் போராட்டத்தை நீடிக்க முடியும்?

**பதில்:** நாங்கள் கெரிலாக்கள், கெரிலா யுத்தத்திற்கு ஒரு காலக் கெடு கூறமுடி யாது. எமது மக்களின் பாதுகாப்பு, சுதந்திரம், சுயமதிப்பு என்பன பெறப் படும் வரை அது தொடரும்.

**கேள்வி:** புலிகள் இராணுவ ரீதியாகப் பலவீனமாகி ஆயுதப் போராட்டத் தைத் தொடர்வதுமுடியாமல் போக இன்னும் அதிக நாள் இல்லை என்று அரசியல் வட்டாரங்களில் ஒரு கருத்து நிலவுகிறது. உங்கள் அபிப்பிராயம்?

**பதில்:** ஒரு வாரத்திலோ இரண்டு வாரத்திலோ, சுதந்திரப் போராளி களை ஒழித்து விட முடியும் என இலங் கை அரசு பல தடவைகள் உல கிற்கும் சிங்கள மக்களுக்கும் சொல்லி வந்து ள்ளது. இந்தியா கூட ஒரு மாதத்துள் எல்லாம் துடைத்தெறியப்படும் என நினைத்தது. எமது உறுதியும் திடமும் இருக்கும் வரை எம்மை யாரும் துடைத் தெறிந்து விட முடியாது.

**கேள்வி:** கொழும்பிலுள்ள பிற அரசி யல் கட்சிகளிடையே புலிகளின் போக் கை எதிர்க்கும் தன்மை வளர்ந்து வருகி றதே? எவ்வளவு காலத்திற்கு மக்கள் ஆதரவுள்ள ஒரு புலி எதிர்ப்புப் போக்கி ற்கு எதிராக உங்களால் நிற்க முடியும்?

→ பக் - 11

நன்றி - நூலகத்திட்டம்



# தென்னிலங்கை நாடக போக்கு சில குறிப்புகள் : 2.

## காமினி ஹத்தொட்டுவேகமவுடன் ஒரு கருத்தாடல்

**சிவமூர்த்தி**

தென்னிலங்கையில் காமினி ஹத்தொட்டுவேகமவை தெரிந்திராதவர்கள் இருக்க நியாயமில்லை. குறிப்பாக நாடகதுறை சார் நண்பர்களின் கண் முன் இவர் நாடகம் ஆடுவார்.

தந்தையார் கொண்டிருந்த நாடக ஆர்வமும் 70களில் தோன்றிய எதிர்ப்பு நாடக இயக்கத்தின் தாக்கமும், அக்காலப் பகுதியில் ஏற்பட்ட சமூக பொருளாதார அரசியல் சூழலும் நாடகத் துறையில் இவரது ஈடுபாட்டி ற்கு காரணமாயிற்று.

பிச்சைக்காரர்கள் அல்லாத நடுத்தர வர்க்க தாய்மார்கள் கூட தெருக்களிலே வீசுபவற்றை பொறுக்கித்திரியும் காலம் அது அக்காலப்பகுதியிலேதான் நாடகத்துறையில் பிரவேசித்தேன் எனக் கூறுகின்றார் இவர்.

70, 71, காலப்பகுதியில் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் ஏற்பட்ட அரசியல் விழிப்புணர்வும் அரசியல் சார்ந்த நாடகப் பார்வையும் இவரது சிறு நாடக வெளிப்பாடுகளுக்கு களம் அமைத்தன. இக்களத்தின் ஊடாகவே தம்மஜாகொடவுடன் தன்னை தொடர்பு படுத்திய இவர் அவருடன் இணைந்து விரிவுரைகளை நிகழ்த்தி நாடகங்களில் நடித்தார். ஆயினும் 73, 74 களில் தம்மஜாகொடவிடம் மீதூரப்பெற்ற பழமை வாதம், அவநம்பிக்கை, ஆத்மீகம் சம்பந்தப்பட்ட உணர்வு, மொத்தத்தில் மெஞ்ஞானத்தை நோக்கிய பிறழ்வு. இவற்றினாலேற்பட்ட தத்துவார்த்த முரண்பாட்டினாலும், கொழும்பையே மையப்படுத்தி அதன் எல்லைக்குள் நாடக மரபைக் குறுக்கி நடுத்தரவர்க்க மக்களின் அபிலாசைகளையே திருப்திப்படுத்திய செயற்பாட்டினாலேற்பட்ட முரண்பாட்டாலும் அவரது குழுவில் இருந்து பிரிந்து தனியே தனக்கொரு வழி அமைத்தார்.

மிகவும் வறிய ஏழையும் தனது நாடகத்தை பார்க்கும் சந்தர்ப்பம் கிடைக்க வேண்டும். அடிநிலை மக்களின் அவலங்களை வெளிப்படுத்த வேண்டும். அவர்களை நோக்கி நாடக மரபு திசைப்படுத்தப்படவேண்டும் என்பதற்காக வீதிநாடகத்துறையை இலகுவான வடிவமாக தேர்ந்தெடுத்தார்.

நாடகத் தயாரிப்புக்கான நிதி பற்றிய விடயத்தில் இறுக்கமான நிலைப்பாட்டைக் கொண்டுள்ள இவர் சொல்கிறார். "பணத்துக்காகவோ, வியாபாரத்துக்காகவோ நாடகம் போடப்படுவதை நான் வெறுக்கிறேன். அதுபோல் பணத்தை அள்ளி வீசும் நிறுவனங்களிடம் இருந்தோ அல்லது வேறு வழிகள் மூலமோ பணத்தை எடுத்துகலாசார வேலைகள் செய்வது தவறானதும் அழிவை நோக்கி இட்டுச் செல்வதும் ஆகும். உதாரணமாக நுழைவுச் சீட்டுக்குக் கூட நாம் நாடகம் போடுவது இல்லை. இதுவிடயத்தில் வியாபாரிகளும் விளம்பரதாரர்களும் எம்மை பயன்படுத்திவிடுவர் இவ்வாறு எம்மை பயன்படுத்திய பல இடங்களில் இறுதிநேரத்தில் நாடகத்தை நிறுத்தி உள்ளோம் இங்கு எதுவித விட்டுக் கொடுப்புகளும் இல்லை.

1976களில் இருந்தே பௌத்தகலாசாரத்துடனும் சமூகப்பிரக்ஞையுடனும் ஆங்காங்கே நிலவிலந்த வீதி நாடகத்துறைக்கு 74களில் இருந்து புதிய உந்துதலையும் உத்வேகத்தையும் கொடுத்து வருகிறார். நிறுவன ஒழுங்கமைப்பில் இயங்கும் இவரது குழுவில் கடந்த 14 வருடங்களாக இவருடன் உழைக்கும் இருகலைஞர்களும் இருக்கிறார்கள்.

இன்று வீதிநாடகத் துறையில் 16வ்யதைப் பூர்த்தி செய்துள்ளார். தான் சார்ந்த நாடக இயக்கம் எந்த அரசியல் இயக்கங்களையும் பிரதிநிதித்துவப் படுத்தாமல் இருப்பதனால் தான் நீண்ட காலம் உயிர்வாழ்கிறது என்றும் அதற்காக சொந்த அரசியல் கருத்து இருக்கக்கூடாது என்பது அல்ல. சொந்தக்கருத்து இருக்கலாம், ஒத்தகருத்துடன் வேலை செய்யலாம். ஆனால் அரசியல் இயக்கங்களுடன் தொடர்பு வைக்கக் கூடாது என்றுஅபிப்பிராயப் படுகிறார்.

இவரது நாடகங்கள் யாவும் சமூக அநீதிகள் அடக்கு முறைகள், இனவாதம், யுத்தம் என்பவற்றிற்கு எதிரான கருத்துக்களையே கொண்டு உள்ளன இக்கருத்துக்களை அன்றாடவாழ்வுடன் தொடர்பு படுத்தி குயீட்டு பாணி மூலம் பிரதான செய்தியைச் சொல்கிறார்.

முதன் முதலாக அநுராதபுரத்தில் சமூகநோக்கை அடிப்படையாகக் கொண்ட முன்னோடிகளின் ஆதரவுடன் 'புத்தரின் மறுபிறப்புப்பற்றிய பார்வை' எனும் நாடகத்தை அரங்கேற்றினர். அதாவது பௌத்த மதத்தின் கருத்துப்படி மீண்டும் ஒருமுறை மண்ணுலகில் புத்தர் அவதரிப்பார் மக்களின் துயரங்களைத்துடைப்பார் என்பது நம்பிக்கை. ஆனால் உலகில் நடக்கும் அநீதிகளை வானொலி, பத்திகைகள் மூலம் அறிந்தால் இங்கு ஒரு போதும் வரமாட்டார் என்ற கருத்தைக் கொண்ட நாடகத்தை, பொஸன் பௌர்ணமிதினத்தன்று மேடை ஏற்றினர். இத்தினத்தில் இலங்கையின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் அநுராதபுரத்திற்கு மக்கள் திரண்டுவருவதனை கருத்தில் கொண்டு புகையிரத மேடையில் நிகழ்த்தி பாராட்டுக்களைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.


தென்னிலங்கையின் மூலை முடுக்கெல்லாம் பயிற்சிப் பட்டறைகளை நடாத்தி இந்தியா, பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளிலும் சிறந்த அனுபவங்களைப் பெற்ற இவர் மாதக் கணக்கில் உடற்பயிற்சிகளை நடாத்து வதில் நம்பிக்கை அற்றவராகவும், தனது பயிற்சிகள் யாவும் காலம், நேரம் இடம் என்பவற்றிற்கு அமைய, துரித கதியில் செயற்படவும், பிரதான செய்தியை தெளிவாக சொல்வதற்குமே முக்கியத்துவம் கொடுக்கின்றன என்கிறார். சமூகத்தின் ஒவ்வோர் அசைவும் மனிதனின் உடல் அசைவில் பிரதிபலிக்க வேண்டும். எனவே ஒருகலைஞன் சமூகத்தின் ஒவ்வோர் அசைவையும் நுணுக்கமாக அவதானித்தல் வேண்டும் அதற்குரிய பயிற்சியே அவசியம் எனக் கூறுகின்றார்.

தென்னிலங்கையின் எல்லாவிதமான மக்களையும் கிராமங்களையும், நகரங்களையும் நேரடியாகத் தரிசித்து ஏராளமான வீதிநாடகங்களைத் தயாரித்து நடித்த அனுபவம் எனக்குத்தான் உண்டு என உறுதியாகக் கூறும் இவரது வழிகாட்டலில், பயிற்சிப்பட்டறைகளில் பண்பட்டவர்கள் தான் இன்று பிரபலமான நாடக எழுத்தாளர்களாகவும் இயக்குநர்களாகவும், நடிகர்களாகவும் சுடர்விட்டு பிரகாசிக்கின்றனர். பராக்கிரம நீரியல்ல, லின்டன் சேமகே, றிட்லிசில்வா போன்றவர்கள் இவர்களில் குறிப்பிடத்தக்க நெறியாளர்கள் ஆவர்.

இவ்வகையில் 16 வருடங்களாக உறுதியுடனும் தியாகத்துடனும் உழைத்து வீதி நாடகத் துறையை வளம்படுத்திய காமினி ஹத்தொட்டுவேகம பற்றிய விமர்சனங்களும் ஏனைய சிங்களக் கலைஞர்கள் மத்தியில் இருப்பதனை உணரமுடிகின்றது. குறிப்பிட்டவரையறைக்குள் போடப்படும் மேடை நாடகங்களை நிராகரிக்கும் போக்கும் உறுதியான கருத்துப் போக்கின்றிய தளம்பல் நிலை பற்றியும் ஏனைய நாடகக் கலைஞர்கள் சிலர் முரண்பட்டு தனியே விலகியுள்ளனர். எனினும் இவர்கள் யாரும் காமினியின் வேலைத்திறமை பற்றியும் அயராத உழைப்பு பற்றியும் நாடகத்துறை சார்ந்த அவரது அறிவு பற்றியும் உயர்கணிப்பீட்டையே கொண்டுள்ளனர் என்பதில் இருந்து சிங்கள நாடக வரலாற்றில் காமினி ஹத்தொட்டுவேகமவின் பங்கு பற்றி நாம் புரிந்து கொள்ளலாம்.●

---

# சண் எழுதுவது : இனத்துவ முரண்பாட்டின் மூலம் - 3



அநேகமாக இனப்பிரச்சினைகட்கும், கலவரங்கட்கும் அடிப்படையில் பொருளாதாரக் காரணங்களையே நாம் காணலாம். இதனால் தான் பொருளாதாரத்தில் வளர்ச்சியடைந்த நாடுகளில் இனப் பிரச்சினைகள் குறைவு, தேசத்தின் பொருளாதாரம் நன்றாக வளர்ச்சியடைந்து எல்லா மக்களுக்கும் இனபேதமின்றி சமவாய்ப்பைக் கொடுக்குமாயின் இனக்கசப்புக்கு இடம் குறைவு. இலங்கை போன்ற நாடுகளில் பொருளாதாரம் சரியான வழியில் வளர்ச்சியடையாததன் காரணமாகத்தான் இருக்கிற செல்வத்தை ஒரு இனத்தைச் சேர்ந்தவர்கள் தாங்கள் அபகரித்துக் கொள்ளவும், வேறு இனத்தைச் சேர்ந்தவர்கட்கு எதிராக வேறுபாடு காட்டவுமான நிலைமை உருவானது.

1986 ஆம் வருடத்தில் நடந்த பாராளுமன்றத் தேர்தல் காலத்தில் காலம் சென்ற செனட்டர் எஸ். நடேசன் கியூ.ஸி. தேர்தல் மேடைகளிலிருந்து ஒரு ருசிகரமான கதையைச் சொன்னார். ஒரு வீட்டில் இரண்டு குடும்பத்தினர் வசித்து வந்தனராம். ஒரு குடும்பத்தில் 5 பேரும், மற்றக் குடும்பத்தில் 3 பேரும் இருந்தனர். அவர்கள் மத்தியில் ஒரு பானை சோறு இருந்தது. அதை எவ்விதம் அவ்விரு குடும்பங்களுக்கு மத்தியில் சரியாகப் பிரிப்பது என்பது தான் பிரச்சினை. 3 நபர்கள் இருந்த குடும்பத்தினர், "நீங்கள் ஒரு குடும்பம், நாம் வேறொரு குடும்பம். ஆனபடியால் இந்தப் பானை சோறை சரி அளவாகப் பகிர வேண்டும்" என்றார். மற்றக் குடும்பத்தவர் என்ன கூறினாரென்றால், "நாங்கள் 5 பேர், நீங்கள் 3 பேர். ஆனபடியால் கூடியபங்கு எங்களுக்கு வர வேண்டும்." இவ்விதமாக மண்டையை உடைத்துக் கொண்டு வாதாடினாலும் ஒரு நியாயமான முடிவுக்கு வர இயலாமலிருந்தது. இப்பிரச்சினைக்குச் சரியான முடிவு காண வேண்டுமென்றால் ஒரு பானை சோறை இரண்டு பானை சோறாக ஆக்குவதற்கு வழிவகை எடுக்க வேண்டும். அப்போது ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு பானை சோறைக் கொடுத்து பிரச்சினையைச் சமாதானமாகத் தீர்த்து வைக்கலாம். வேறுவழி கிடையாது.

இதனால் தான் ஆரம்பகாலத்தில் இலங்கையின் இடதுசாரி இயக்கம் சிறுபான்மை மக்களின் உரிமைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்காது, ஒரு சோஷலிஸ அரசாங்கத்தின் கீழ் முழு இலங்கையையும் பொருளாதார ரீதியில் வளர்ச்சியடையச் செய்தால் எல்லா இனங்களைச் சேர்ந்தவர்களுக்கும் சமவாய்ப்புக் கிடைக்கும் என்றும், இதனால் அவர்கள் மத்தியில் பிரச்சினைகள் எழாது என்றும் நம்பினர். இடதுசாரி இயக்கத்திற்கு சிறுபான்மை மக்களின் ஆதரவு கிடைத்து இக்கனவு நனவாய் வந்திருந்தால் இனப் பிரச்சினையை வேறுவிதத்தில் தீர்த்திருக்கலாம். துரதிர்ஷ்டம், ஆனால் அது நடைபெறவில்லை. ஆனபடியினால் தமிழ் மக்கள் மத்தியில் இனக் குரோதங்கள் உருவாகி சிங்களவர் வேறு, தமிழர் வேறு என்ற மனப்பான்மை வளர்ந்து இன்றைய நிலைக்குக் கொண்டு வந்து விட்டது.

1931 ஆம் ஆண்டு முதல் இலங்கையில் ஏதோ ஒரு விதமாகப் பாராளுமன்ற ஜனநாயக முறை நிலவி வருகின்றது. இதன் அடிப்படை; சர்வசன வாக்குரிமை , சர்வசனவாக்குரிமை இருக்கும் மட்டும் எந்தொரு தேசத்திலும் பாராளுமன்றத்தில் பெரும்பான்மை மக்களுக்கு கூடிய ஆசனங்களும், ஆதிக்கமும் கிடைக்கும், இதைத் தவிர்க்க முடியாது. இலங்கையிலும் இது தான் நடந்தது. ஆனபடியினால் தான் முதன் முதலில் ஜீ.ஜீ. பொன்னம்பலத்தின் தலைமையின் கீழ் இனவாதத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு பாராளுமன்ற முறை கோரப்பட்டது. அது மறுக்கப்பட்ட பின் தான் இலங்கையின் ஒரு பகுதியைத் தாங்களே ஆள உரிமை தரும்படி கோரிக்கையை முன் வைத்தனர். இதில் என்ன தெரியவருகின்றதென்றால் முதலாளித்துவ பாராளுமன்ற ஜனநாயகத்தின் மூலமாக இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வுகாண முடியாது. பெரும்பான்மையினர் எப்பொழுதுமேபெரும்பான்மையினராகத் தான் இருப்பர். இதிலிருந்து எழும்பும் பிரச்சினை தான் இந்நிலையில் இனப்பிரச்சினைக்கு எவ்விதம் தீர்வு காண்பது என்பது.

இலங்கையின் சரித்திரம் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முதலாளித்துவப் பாராளுமன்ற ஜனநாயகத்தினால் முடியாதென்றும் அதற்குப் பதிலாக ஆயுதப் போராட்டமே ஒரே வழி என்பதையும் ஒப்புவித்திருக்கிறது.

ஆயுதப் போராட்டம் இல்லாமல் ஒடுக்கப்பட்ட இனமோ/தேசமோ விடுதலை அடைய முடியாதா? என்ற பிரச்சினையைச் சிலர் கிளப்பலாம்.

எனக்குத் தெரிந்தளவுக்கு உலக சரித்திரத்தில் இதற்கு ஒரேயொரு உதாரணம் மட்டும் தான் உண்டு. முதலாவது மகா யுத்தத்திற்கு முன் நோர்வே தேசத்தை சுவீடன் ஆண்டு வந்தது. நோர்வே மக்கள் தமது சுதந்திரத்திற்காகப் பல கிளர்ச்சிகளைச் செய்தார்கள். ஆனால் வெற்றி பெறவில்லை. கடைசியில் அவர்களது வெற்றிக்குக் காரணம் சுவீடனின் தொழிலாளி வர்க்கத்தின் ஆதரவு தான். இதன் காரணமாக சுவீடனின் முதலாளி வர்க்கம் சமாதானமாக நோர்வேக்கு சுதந்திரத்தை வழங்கியது.

இதனடிப்படையில் தான் இலங்கையிலும் இடதுசாரி இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் சிறுபான்மை மக்கள் தமது நியாயமான கோரிக்கைகளை வென்றெடுக்க வேண்டுமென்றால், பெரும்பான்மை மக்களாகிய சிங்கள மக்களின் ஆதரவை முதலில் வென்றெடுக்க வேண்டும் என்று கூறி வந்தனர். முக்கியமாக சிங்கள தொழிலாளி வர்க்கத்தின் ஆதரவைப் பெற்று சிங்கள மக்கள் மத்தியில் இனவாதம் பெருகுவதை தடை செய்வதன் மூலம் தான் தமிழ் மக்கள் வெற்றியை நோக்கிச் செல்ல முடியும். ஆனால் இது நடைபெறவில்லை.

இலங்கையின் தமிழ்த் தலைவர்கள் சிங்கள முதலாளித்துவ தலைவர்களுடன் ஒன்றுபட முன்வந்தார்களே ஒழிய, சிங்கள இடதுசாரி இயக்கத்துடன் ஐக்கியப்பட எத்தனிக்கவில்லை.

இதன் காரணமாகத் தான் இன்றைய நிலைமை உருவாகி இரு இனத்தவர்களும் ஆயுதப் போராட்டத்தின் மூலமாக ஒரு தீர்வுக்கு வர எத்தனிக்கின்றனர்.

நன்றி - நூலகத்திட்டம்



# வின்னியும்



# அவரது கேலிச்சித்திரங்களும்.

கேலிச்சித்திரங்கள் ஒரு நாட்டின் அரசியல், சமூக வாழ்வில் முக்கியமான ஒரு மாதிரியாக இன்று உலகம் முழுவதும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இது வெறுமனே ஒரு கலைவடிவமாக மட்டுமன்றி பிரச்சார ஆயுதமாகவும், விமர்சன ஆயுதமாகவும் விளங்குகிறது இன்று.

இந்த வகையில் தெற்கின் இளம் கலைஞர் வின்னி ஹெட்டிகொடவின் அரசியல் கேலிச்சித்திரங்களும் நமது வாழ்வின் சூட்சுமமான பகுதிகளை வெளிப்படுத்து வனவாகவும், இழிவுற்ற நமது வாழ்வின் ஒவ்வொரு நடத்தையையும் பிரதிபலிப்பனவாயுமுள்ளன. நகைப்புக்கும், கிண்டலுக்குமப்பால் ஏதோ ஒரு சிந்தனையை தொற்ற வைப்பனவாயமுள்ளன. இந்த வகையில் அவர் ஒரு நவீன கேலிச் சித்திரக் காரராக தன்னை வெளிப்படுத்தியுள்ளார்.

இன்னும் சொல்லப் போனால் மக்களின் இழிந்த வாழ்நிலைமையும் அது தொடர்பான அவரது சிந்தனையும் அவரை ஒரு "தூரிகைப் போராளி" யாக மாற்றியுள்ளன போலும்.

கொந்தளிப்பு நிறைந்த தெற்கின் காலியில் வல்பொல கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட வின்னி களனிப் பல்கலைக் கழகக் கலைப்பட்டதாரியாவார். ஏறத்தாழப் பத்து வருடங்களுக்கு முன்னர் 'திவயின' வில் சேர்ந்த இவர் 1987 இல் இந்திய பரோடா பல்கலைக் கழகத்தில் அரசியல் கேலிச்சித்திரம் பற்றிய மேற்படிப்பைத் தொடர்ந்தார்.



'மனந் திறந்து பேசுவோம்..'

அக்காலப் பகுதியில் தான் இவரது முதலாவது அரசியல் கேலிச்சித்திரக் கண்காட்சி Sketch of Reality நடைபெற்றது. இரணடாவது கண்காட்சி சத்வ ரூப (satva Rupa) குஜராத்தில் நடைபெற்றது.

இலங்கையில் முதன் முதலாக கடந்த டிசெ 26 - 29 வரை கொழும்பு ஆர்ட் கலரில் நடைபெற்றது. இலங்கையில் நடைபெற்ற இரண்டாவது அரசியல் கேலிச்சித்திரக் கண்காட்சி இதுவாகும். இதற்கு முன்னர் கடந்த ஆண்டின் முற்பகுதியில் 'ஐலன்ட்' கேலிச்சித்திரக் காரரான விஜேசோமா வித்தியோதய பல்கலைக் கழகத்தில் ஒரு கண்காட்சியை நடாத்தி இருந்தார்.

வல்பொல கிராமம் அமைதியையும் அதன் தீவிரத்தையும் வின்னிக்கு வழங்கியுள்ளது போலும். அவரது கேலிச்சித்திரங்கள் கூட அமைதியாக சீராக வரைந்த கோடுளாகவும், அவற்றின் வெளிப்பாடு மிகுந்த தீவிரத் தன்மை கொண்டனவாயும் அமைந்துள்ளன.

இது ஒரு மறைமுகமான செயற்படும் கலை. இதனால் சர்வாதிகார ஆட்சியாளர்கள் இதை எப்போதும் நசுக்கியே வந்துள்ளார்கள். இவற்றுக்கு மத்தியிலும் இவருடைய மக்கள் தொடர்பான நேசிப்பும், அவர்களது வாழ்க்கை தொடர்பாக அக்கறையும் கடுமையான பத்திரிகைத் தணிக்கைகளுக்கு மத்தியிலும் இவரதுவெளிப்பாடாகக் காணக் கிடக்கிறது. துணிகரமான ஆற்றல் படைப்பு முழுவதும் விரவி நிற்கிறது. இதனால் நசுக்கப்பட்ட மக்களின் உணர்ச்சி தட்டியெழுப்பப்பட்டு அவர்களின் எதிர்ப்புகளுக்குத் தூபமிடப்பட்டுள்ளது.

ஏன் அவரே சொல்கிறார். "அரசு வாழ்க்கையின் ஒவ்வொரு முனையிலும் தொடத்தொட எமது தூரிகை கூர்மையடைந்து கொண்டே போகும். அது தவிர்க்க முடியாதது."

"பாருங்கள், நான் வெறும் ஓவியனாகத் தான் இருந்தேன். எழுபதுகளில் தெற்கில் நடந்த பிரச்சினைகளும், விளைவுகளும் என்னைச் சிந்திக்கத் தூண்டின. அன்றிருந்த அரசு படுமோசமான நடவடிக்கைகளை எடுத்தது. மக்களின் வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்திலும் அது தலையிட்டது.


எழுபத்தேழில் பதவிக்கு வந்த அரசோ இன்னும் ஒரு படி மேலே போய் மக்களிடம் எஞ்சி இருந்த வாழ்க்கையையும் பிடுங்கிக் கொண்டது. எனது தூரிகையும் கூரானது. இதன் பிறகே எனது கேலிச்சித்திரம் அரசியலானது.

இந்த நாட்டிலுள்ள அனைத்து மக்களும் சமமாக வாழவேண்டுமென்பதே எனது விருப்பம். அதையே நான் தேசம் என்கிறேன். நாங்கள் இந்த தேசத்தை ஆள அனுப்பியவர்களே எங்களை ஆள்வத்றகாக எமக்கிடையில் பிளவுகளை உண்டாக்கி பாவிக்கிறார்கள். மக்களுடைய மனதில் இந்தக் தேசம் மாறி மாறி ஆட்சிக்குவரும் அரசியல் கட்சிகளது என்ற எண்ணம் வளர்க்கப்பட்டுள்ளது. அதை மறுத்து இது மக்களது என்ற எண்ணம் ஏற்படுத்தப்பட வேண்டும்.

நாட்டைப் பிளவுபடுத்தி நாட்டைப் பிரிப்பது என்பதை மக்கள் தீர்மானிக்கவில்லை. இது எங்களை ஆள்பவர்கள் தீர்மானித்தது. அரசு தனது நிலையிலிருந்தே ஒடுக்கு முறையை ஆரம்பிக்கிறது. இது சிங்கள மக்களுடைய விருப்பமல்ல. இது முதலாளித்துவ ஏகாதிபத்திய அரசின் வழிமுறை. அரசின் இராணுவம் சிங்கள மக்களின் இராணுவமல்ல. அது முதலாளித்துவ அரசின் கூலிப்படை. சிங்களமக்களது குரல் என்பது வேறு. அரசினது பேச்சென்பது வேறு. சிங்கள மக்களும் அரசும் ஒன்றல்ல.







நீங்கள் ஒரு உதாரணத்திலிருந்து உண்மையைப் புரிந்து கொள்ளலாம். கடந்த ஜூனில் யுத்தம் ஆரம்பமான போது யுத்தத்தில் அரச இராணுவம் வெல்ல வேண்டும் என்பதற்காக பௌத்த விகாரைகள் தோறும் போதி பூஜா நடத்தப்பட்டது. படையினருக்கு தெய்வ ஆசி வேண்டி தெருக்களில் 'பனர்கள்' தொங்கவிடப்பட்டிருந்தன. ஆனால் இரவிரவாகவே இவை கிழித் தெறியப்பட்டன பல கிராமங்களில்.

இவ்வாறு கிழிந்து விழுந்து கிடந்த 'பனர்களை' எந்தவொரு கிராமத்தவரும் எடுத்து மீளக் கட்டவில்லை. இதிலிருந்தே சிங்கள மக்களது நிலையை நீங்கள் புரிந்துகொள்ள முடியும்.

மக்கள் தான் சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் எனப் பிளவுபட்டுக் கிடக்கிறார்கள். தலைமைகளோ பாராளுமன்றத்துள் ஊடல் கொள்வதோடு சரி.

உதாரணமாகப் பாருங்கள், நாங்கள் அரசுடன் மோதும் போது நீங்கள் சமாதானமாக இருக்கிறீர்கள். நாங்கள் சமாதானமாக இருக்கும் போது நீங்கள் மோதுகிறீர்கள். இது அரசின் பலம், எமது பலவீனம்.

இதே போல இந்திய அமைதிப்படை வரும் போது நாம் எதிர்த்தோம். நீங்கள் மௌனமாயிருந்தீர்கள். நீங்கள் எதிர்த்த போது நாம் மௌனமாயிருந்தோம் அல்லது மௌனமாயிருக்க வைக்கப்பட்டோம்.

மொத்தத்தில் அரசு தன்னைப் பாதுகாத்துக் கொள்ள தேவையானவர்களை வரவழைத்தது. சிங்கள மக்களையோ/ தமிழ் மக்களையோ பாதுகாக்க அல்ல.

தமிழர்களைப் பாதுகாக்க என்று இந்தியாவோ, முஸ்லிம்களுக்காக என்று அரபு நாடுகளோ சிங்களவர்களைப் பாதுகாக்க என்று கூறிக் கொண்டு மொஸாட்டோ அமெரிக்காவோ வரலாம்.

ஆனால் நாம் ஒரு அடிப்படை உண்மையைப் புரிந்து கொள்ள வேண்டும். உண்மையில் இவர்கள் யாரும் எந்த மக்களையும் பாதுகாப்பதற்காக வரவில்லை வரப்போவதுமில்லை என்பதைத் தான்." என்று அவரது கேலிச்சித்திரங்களைப் போலவே தீவிரமாகப் பேசிக்கொண்டே போனார் வின்னி.

இறுதியாகச் சொன்னார். 'நாம் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை ஆதரிக்கிறோம். அரசு அப்படி இல்லை என்று காட்டிக் கொள்கிறது. அரசின் கருத்து மக்களின் கருத்தல்ல என்பதை நான் மீண்டும் வலியுறுத்துகிறேன்.'

இப்பேர்ப்பட்ட துணிகரமான ஆற்றல் அவரது பேச்சில் மட்டுமல்ல படைப்புக்களிலும் தழுவிக் கிடக்கிறது. வின்னியின் படைப்புக்கள் வெளி அலங்காரமோ, முகப்பூச்சோ இன்றி உள்ளதை உள்ளபடி காட்டுவனவாக உள்ளன.

கடந்த பத்து வருட கால இலங்கையில் ஏற்பட்ட சமூக, அரசியல், பொருளாதார விளைவுகளை வின்னியின படைப்புக்கள் புலப்படுத்துவனவாயுள்ளன. குறிப்பாக இலங்கை-இந்திய ஒப்பந்தம், இந்தியப் படைவருகை, ஜேவி.பியின் போராட்டம், அரசின் திறந்த, தாராள பொருளாதாரக் கொள்கை என எல்லாவிதமான அழிவுகளும் பாதிப்புகளும் நிறைந்த நாட்டின் இருள் சூழ்ந்த காலகட்டத்தின் பிரதிமைகள் தான் இவை.

இ. சங்கரன்



நன்றி - நூலகத்திட்டம்



## கலாநிதி கவனம்!

நீங்கள் எழுதிய பனங்கொட்டை சமூகமும் பனங்கொட்டை கலாசாரமும் என்ற கட்டுரையைப் படிக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. யாழ்ப்பாணத்துத் தமிழனா இப்படி எழுதினான் என நினைத்து என் உள்ளம் சுக்கு நூறாக வெடித்தது. என்மனம் அமைதியடைய நீண்ட நேரம் சென்றது. எப்படி ஐயா அமெரிக்காவில் இருந்து கொண்டு எம் மக்களைப் பற்றிப் புரிந்து கொள்கிறீர்கள்? உமது பிள்ளைகளை வெளிநாட்டில் படிக்க வைத்து விட்டு ஏனையா இங்கு இருக்கும் மக்களையிட்டு வீணாகக் கவலைப்படுகிறீர்?

சற்று சிந்தித்துப் பாருங்கள்: புலிகளுக்கு வெளிநாட்டில் சென்று சுகபோகங்களை அனுபவிக்க தெரியாதா? அவர்கள் என்ன முனிவர்களா? அவர்களுக்கும் மனித உணர்ச்சிகள் உண்டு. இதை விட்டு அவர்கள் சோற்றுப் பார்சலுக்காகப் போராடவில்லை. உம்மைப் போன்றவர்களின் பிள்ளைகள் எதிர் காலத்தில் இங்கு வந்து குடும்பம் நடத்த சுதந்திரம் தேடி தங்கள் உயிரை துச்சமென மதித்து போராடுகிறார்கள். இதை ஞாபகமாகக் கொள்ளுங்கள். இங்கு நடப் பது புலிகள் போராட்டமல்ல. மக்கள் போராட்டம். இனியும் மறந்தும் மக்க ளையும் புலிகளையும் பிரித்து கற்பனை செய்து பத்திரிகைக்கு எதுவும் எழுதிவிட வேண்டாம். இதை உங்களிடம் மன்றாட்டமாகக் கேட்கிறேன்.

புலிகள் பந்தம், பாசம் உணர்ச்சிகளை கட்டி வைத்து விட்டு கழுத்தில் நஞ்சைக் கட்டிக் கொண்டு மரணத்தை எந்நேரமும் ஏற்கத் தயாராக நிற்கிறார்கள். ஏன்? எதற்காக? தமது சுயநலத்திற்காகவா? மக்களுக்காகவா? அவர்களைத் தெய்வம் போல வழிபடும் மக்களைத் தான் இங்குகாணக் கூடியதாக இருக்கிறது. இப்படியான மக்கள் மத்தியில் உமது பேச்சு உணர்ச்சியூட்டும் ஒன்றாக இருக்கிறது. ' ஐயா புலிகள் மக்களின் தெய்வங்கள் ' பவுண் மட்டுமல்ல எங்கள் உயிரையே போராட்டத்திற்காக அர்ப்பணிக்க தயாராக நிற்கும் காலம் ஐயா இது. உங்களுக்கு எங்கே புரியப் போகிறது?

கலாநிதி ஐயா அவர்களே! சந்தர்ப்பம் இருந்தால் உவ்விடம் ஒரு துப்பாக்கி என்ன விலை என கேட்டுப்பாருங்கள். இதை அறிந்தீரானால் புலிகள் ஏன் முதலாளி வர்க்கத்திடம் வரிவசூல் செய்கிறார்கள் என்பது உமக்கும் புரியும். இது புரியாமல் வரிவசூல் பற்றி கேவலமான முறையில் பத்திரிகைக்கு எழுதி விடாதீர்கள். இங்குள்ள டாக்டர்கள், எஞ்சினியர்கள், எக்கவுன்டன்மார் ஆயிரம் இருந்தும் என்ன சுகம்? அவர்கள் சரியாக நடந்திருந்தால் இன்றைய இளம் சமுதாயத்தை இழக்கும் துர்ப்பாக்கிய நிலை வந்திருக்காது. இன்று ஆயிரம் ஆயிரம் இளைஞர்களை இழந்து தவிக்கின்றோம். அவர்களும் டாக்டர்கள், எஞ்சினியர்கள், எக்கவுண்டன்களாக வந்திருப்பார்கள். பட்டம் பதவிக்காக வாழும் சுயநலவாதிகள் தான் இன்று அரசாங்கத்தோடு சேர்ந்து கைகட்டி நிற்கிறார்கள். இவர்கள் அமெரிக்காவில் இருந்தாலென்ன? இங்கிலாந்தில் இருந்தாலென்ன? அவர் களால் என்ன பிரயோசனம் உண்டு. இவர்கள் தான் நீங்கள் கூறும் சுயநல வாதிகள்.

ஐயா நீங்கள் கூறியது போல் சமூகம் நோய்வாய்ப்படவில்லை. சமூகம் நலமே இருக்கிறது. உங்களைப் போன்ற இனத்து ரோகிகள் தான் சித்தசுவாதீனமுற்று வெளிநாடுகளில் அலைகிறார்கள். இங்கு யாழ்ப்பாணத்திலிருக்கும் அத்தனை மக்களும் சுக தேகிகளாக இருக்கிறார்கள். அவர்களைப் பற்றி கவலை வேண்டாம் ஐயா?

நாட்டில் எலும்புக் கூடும் மண்டை ஓடும் தான் மிஞ்சும் என அஞ்சாதீர்கள். தூரத் தில் இருந்து கொண்டு ஏன் அஞ்சுகிறீர்கள். உங்கள் பரிதாபமான நிலையை மாற்றுங்கள். நான் ஒரு சாதாரண பெண். இன்று உங்களைப் பேனா முனையில் சந்திக்கின்ற வாய்ப்பை சரிநிகர் பத்திரிகை ஏற்படுத்தி உள்ளது. ஐயா அரசாங்கத்தின் அத்தனை போர் முனைகளையும் முகம் கொடுத்து சந்தித்துள்ளேன். இப்படி இருந்தும் சந்தோஷமாக இருக்கின்றேன். எந்தவிதமான போர்ாட்ட வடிவமும் மக்கள் சிந்தனைகளையோ, உணர்ச்சிகளையோ மழுங்கடி க்காது. வெடிச்சத்தம் கேட்காத நாட் களில் எங்களுக்குப் போரடிக்கிறது. விமானம் குண்டு போடும் போது ஓடி ஒளிப்பது எங்களுக்கு பொழுது போக்கு விளையாட்டாகிவிட்டது. ஐயா! எழுதும் போது தான் ஞாபகம் வருகிறது நாங்கள் யாழ்ப்பாணத்தில் வாழ கொடுத்து வைத்தவர்கள் என்று.

உமக்கு இந்த வயதில் ஏன் ஐயா இந்த வீண் வேலை. ஏதாவது சமூகத் தொண்டு செய்ய முடியுமானால் செய்யுங்கள். நேரம் பொன்னானது அதனை வீணாக்கி விடாதீர்கள். நேரமிருந்தால் சுதந்திர உணர்வு உமது உடலில் ஒடுகின்றதா என டாக்டரிடம் பரீட்சித்துப் பாருங்கள். சுதந்திர உணர்வு இருந்தால் தொடர்ந்தும் பத்திரிகைக்கு எழுதுங்கள். இல்லையேல் அமெரிக்கப் பெண்களைச் சுற்றி இன்பத்தை அனுபவித்து அவர்களைப் பற்றிப் பத்திரிகைக்கு எழுதுங்கள். தயவு செய்து புலிகள் பற்றி தப்பாக எழுதுவதை இன்றுடன் நிறுத்தும்படி மிக மன்னிப்பாகக் கேட்கிறேன். இல்லையேல் நீர் எங்கிருந்தாலும் உமது காதுச்சவ்வு விரைவில் துப்பாக்கி குண்டு பட்டு வெடித்து நீர் அமெரிக்காவை விட்டு உமது பிள்ளைகளையும் பிரிந்து மேலே போகும் நிலைக்கு ஆளாகி விடாதீர்கள்.

மக்கள் தாகம் தமிழீழ தாயகம் இந்த வார்த்தையைக் கனவிலும் மறக்க வேண்டாம். மீண்டும் மறுபத்திரிகை வெளி வந்தால் சந்திப்போம்.

இந்துமதி
யாழ்ப்பாணம்.

## தொடை நடுக்கமா ?

அனைத்து இதழ்களிலும் சரிநிகர் அரசாங்கத்திற்கெதிராக மிகத் தெளிவான பல விமர்சனங்களை கொண்டிருக்கின்றது. அதேவேளை இன்னும் அரசாங்கம் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீரித்து சரியானதொரு அரசியல் தீர்வை முன்வைக்க வேண்டும் என்பதை தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்துள்ளது. தமிழ் மக்கள் மீது நடத்தும், போரை நிறுத்தி பொருளாதார தடைகளை நிறுத்தி, உடன் ஆக்கபூர்வமாக செயல்பட வேண்டும் என்றும் வலியுறுத்தி வந்துள்ளது. அப்படியாஞல் தான் தமிழ் மக்கள் சரிநிகர் சமானமான வாழ முடியும் எனவும் சரிநிகர் கருதுகிறது.

எனது பிரச்சினை என்னவெனில் சரிநிகர் சமானமாக வாழ்தல் என்பது என்ன? சரிநிகர் சமானமான மிருகமாக வாழ்வதா? மனிதனாக வாழ்வதா? ஆனால் இன்று நடக்கும் போராட்டத்தில் தமிழ் மக்களை பிரதிநிதித்துவப் படுத்தும் இயக்கம் முனைவதெல்லாம் நாம் சரிநிகர் சமானமாக மிருகமாக வாழ்வதையே. இதழ் மூன்றின் தீர்ப்பு மக்களிடம் என்னும் சரிநிகரின் கருத்திலே புலிகள் பாசிஸ்டுகளானால் என்ன கொலையாளிகளானால் என்ன அதை மக்கள் பார்த்துக் கொள்ளுவார்கள் என்று கூறப்பட்டி ருக்கிறது. ஆனால் இந்தப் பிரச்சினை யை இவ்வளவு தூரம் சிக்கலாக்கி எமது போராட்டத்தையே பலவீனப்படுத்திய புலிகளைப்பற்றி ஏன் தொட்டுக் காட்டப் பயப்படுகிருர்கள். மக்களுக்கு அதெல்லாம் புரிந்திருக்கும் என் விட்டு விட்டீர்களோ? ஆனால் இலங்கை அரசு, இந்திய அரசு புலிகள் தவிர்ந்த ஏனைய இயக்கங்களைப் பற்றியெல்லாம் மிக மிக வீறாப்பாக எழுதி விட்டு, புலிகள் என்று வந்ததும் மட்டும் அவர்கள் அப்படி இருக்கலாம், இப்படி இருக்கலாம் என விளக்கெண்ணை மேல் நடப்பது ஏனோ? புலிகளுடனை பிரச்சினையை மக்களே தான் தீர்த்துக் கொள்ள வேண்டும் அது சரி. அதற்காக புலிகளைப் பற்றி மக்களுக்கு சரிநிகர் என்ன கூறவிரும்புகிறது புலிகளைப்பற்றி சரிநிகர் தனது வாயால் கூருமல் எப்போதும் ஏனையோரின் வாய்களால் கூறப்பார்க்கிறது. போல் எனக்கு தோன்றுகிறது.

அதை விடவும் இன்னுமொருபடி மேலே போய் இதழ் இரண்டில் வீட்டிலே ஆங்கிலம் பேசும் இரு குழந்தைகளைக் கண்டு மனம் குமுறி 'மெல்லத் தமிழினி' தமிழர்களின் கலாசாரத்தையும் தமிழ் மொழியையும் பாதுகாக்க ஒரேயடியாக குதி குதி யென்று குதித்து அந்தத் தமிழர்களுக்கு அலித்தமிழர் என்றும் பெயர் சூட்டி அவர்களை எந்தத் தேசிய இனத்தில் சேர்ப்பது என்று ஸ்டாலினைத்தான் கேட்க வேண்டும் என எழுதி தனது அரை வேக்காட்டுத் தனத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

இன்று எமது போராட்டத்தில் தம்முடைய சுடுகாட்டு அரசியலால் தமிழ் இனத்திற்கே தீராத இழிவை தேடி வைத்திருக்கும் புலிகளையும் அதற்குத்துணை போகும் புலித்தமிழர் களைப் பற்றியும் பேசவும் எழுதவும் வக்கற்றுப் போய் கொழும்பிலே வாழும் ஓரிரண்டு அலித் தமிழர் பற்றி எழுதும் உங்களைப் பற்றி என்ன சொல்வது?

ஏன் ஐயா நமது புனித புலித்தமிழனைக் கண்டால் நமக்கே தொடை நடுக்கமா? இப்படியே எல்லாவற்றிலும் தலையை விட்டு வாலை அடிக்கும் செயலிலேயே நீங்கள் போனுல் இறுதியில் எதை செய்ய வேண்டுமோ அதை செய்யாமல் எதை செய்யக் கூடாதோ அதைச் செய்து சரிநிகரே அலித்தன்மை கொண்டதாகிவிடும். பின்பு எந்தப் பத்திரிகை இனத்தில் சேர்ப்பதென கேட்க நாம் மக்களிடம் தான் போக வேண்டும். (ஸ்டாலினிடம் அல்ல)

மிக நீண்ட கட்டுரைகளை பக்கத்துக்கு ஒன்று கப் போட்டு நிரப்புவதால் வளர்ந்து வரும் புதிய வாசகர்களை ஒரு மலைப்புக்குள் ஆக்கிவிடுகிறது சரிநிகர். எனவே புதிய வாசகர்களை தன்பால் இழுக்கும் நோக்கில் விசயதானங்களை ஒழுங்கு செய்வது (Matter Setting) நல்லது.

செ.சத்தியசீலன்
கொழும்பு

## வாசகர் செ(ற)ல்வழி



*அன்புக்குரிய வாசகர்களுக்கு -*

*முன்னைய சரிநிகர் இதழ்களில் வெளியான 'வாசகர் செ(ற)ல்லடி'களுக்கு நாங்கள் எவ்விதமான எதிர் வினையையும் காட்டவில்லை என்றும் வெறுமனே பல வகையான கருத்துகளையும் மோத விட்டு விட்டு பல்கனியிலிருந்து மோதலை ரசித்துக் கொண்டிருக்கிறோம் என்றும் காரமான குற்றச்சாட்டுக்கள் உங்களிடமி ருந்து வந்து குவிந்த வண்ணம் உள்ளன.*

*உங்களிடமிருந்து வருகிற அத்தனை எதிர்வினைகளையும் பிரசுரிக்க எமக்கு விருப்பம் தான். எனினும் பெயர், முகவரி தெளிவாக எழுதப்படாதவற்றை யும், அநாமதேயக் கடிதங்களையும் முகமற்ற விமர்சனங்களையும் பிரசுரிப்பது பத்திரிகா தர்மத்துக்கு அப்பாற்பட்டது என்பதை அனைத்து வாசகர்களுக்கும் ஞாபக மூட்ட விரும்புகிறோம். புனைபெயரிலோ அன்றி வேறு பெயர்களிலோ நீங்கள் கடிதங்களையோ ஆக்கங்களையோ பிரசுரிக்க விரும்பினால் அதுவும் தாராளமாகச் சாத்தியம். ஆனால், ஆசிரிய பீடத்துக்கு உங்களுடைய சரியான பெயர், முகவரி விபரம் தெரிந்திருக்க வேண்டும், என்பது முக்கியமானது.*

*வடக்குக் கிழக்குப் பகுதிகளின் யுத்த நிலைமை காரணமாக அப்பகுதிகளில் சரிநிகர் விநியோகம் ஒழுங்கற்றுத்தான் இருக்கிறது.*

*ஆங்காங்கே வ… ஈடுபாடுள்ள … கிடைக்கக் கூடி… விட்டு, உடனடி… 'அதிரடித்' தா… கிறீர்கள்.*

*முதலாவது … வெளிவந்த … சியாகப் படித்… வாசகருக்கும் … குறித்த நிலை… கருத்துக்களைய… வீசு கிறது என்…*

*சரிநிகருக்கு வ… டம் வாளும் கி…*

*எந்தவொரு அ… கட்சியையோ … போவதுமல்ல. … கென ஒரு கு… இல்லை என்பது…*

*சிறுபான்மை ம… மை அங்கீகரிக்… முதன்மையாக … போது எம்மை… விடுவதும் புலி… தப் பண்புகளை… மை மற்றைய … கண்டு கொள்வ…*

## நிரூபிப்பீரா ?

பனங்கொட்டை சமூகமும் - பனங்கொட்டை கலாசாரமும் என்ற கட்டுரையில் சீதனத்தில் வரி வசூலிக்கப் படுவதாக எழுதியுள்ளார். அவ்வாறு எங்கே நடந்தது? அதனை அவர் ஆதார பூர்வமாக நிரூபிப்பாரா? 1990 ம் ஆண்டு வைகாசி மாதத்தில் யாழ் வின்ஸர் திரையரங்கில் நடைபெற்ற புலிகளின் மகளிர் முன்னணியாப்பு மகாநாட்டில் கூட சீதனத்தை ஒழிப்பதே பிரதானமாகக் கொள்ளப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இவரின் கட்டுரையில் EPRLF, ENDLF போன்றவற்றை சாதி அடிப்படையில் வியாக்கியானம் செய்வது இருந்து வருவதாக எழுதியுள்ளார். இதனை நான் முழுமையாக ஏற்றுக்கொள்கிறேன். ஆனல் இவ்வாறு வியாக்கியானம் செய்பவர்கள் புலிகள் அல்ல. யாழ்ப்பாணத்து உயர் குலச் சாதியைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. தற்போது போராடி இறந்து கொண்டிருப்பவர்களில் தாழ்குலச்சாதியினர் இருப்பதனை உயர் சாதியினர் மறந்து விடுகின்றனர்.

அவர்கள் நினைக்கிருர்கள் புலிகளில் இருப்பவர்கள் எல்லாம் உயர் சாதியினர் என்று. இது மிகப் பெரிய தவருகும். புலிகள் கூட ஒரு போதும் சாதி வேற்றுமையை எங்கும் காட்டவுமில்லை. அவ்வாறு நடக்கவுமில்லை?

அடுத்ததாக வாசகர் சொல்லடி பகுதியில் பொ. பூலோகசிங்கம் அவர்கள் புலிகள் யுத்த நிறுத்தத்தை மீறியிருப்பதாக எழுதியுள்ளார். முதலாவது சரிநிகர் இதழை நான் பார்க்கவில்லை. அதைப் பற்றி எனக்குத் தெரியாது. ஆனல் புலிகள் புது வருடத்தில் அறிவித்த யுத்த நிறுத்தத்தை அரச படைகள் மீறியதே தவிர புலிகள் மீறவில்லை.

காத்தான்குடியில் முஸ்லிம்களை படு… கொலை செய்தது புலிகள் என்று… சொல்கிருர். அரசாங்கம்தான் செய்த… தென்று காத்தான் குடிப்பகுதி… யிலிருந்து தற்போது யாழ்ப்பாணத்தில்… தங்கிருக்கும் தமிழ் அகதிகள் சொ… கிருர்கள். காத்தான் குடிப் ப… கொலை செய்த கையுடன் இலங்… அரசு அரபு நாட்டிற்கு ஆயுதம் வா… கப் போனது உமக்குத் தெரியாதா… கிழக்கு மாகாணத்தில் ஏராளமா… தமிழ் இளைஞர்கள் தினசரி பிடிக்க… பட்டு உயிருடன் எரிக்கப்படுவது… காணுமல் போவதும் உமக்குத் தெ… யாதா? அல்லது இதை நீர் அறி… வில்லையா? என்னைப் பொறுத்… வரையில் நீர் யாழ்ப்பாணத்திலிருந்… வெளியேறி நெடுங்காலமென நினை… கின்றேன். சரிநிகர் சரியவில்லை பு… களின் பக்கம் பூலோகசிங்கம் சரிந்… விட்டார் அரசின் பக்கம். குமாரசிங்க… அவர்கள் எழுதியதை நீர் படித்… ருப்பீர் என நினைக்கிறேன்.


சி. தருமராஜன் அவர்கள் புலிகளி… மனித விரோத செயல்கள் பற்…

நன்றி - நூலகத்திட்டம்



எழுதவில்லையே என்கின்ருர். மற்ற இயக்கங்கள் வடக்கு - கிழக்கில் செய்த மனித விரோதச் செயல்கள் தெரியாதா? வீதி வீதியாக எத்தனை சடலங்கள் கிடந்தன? எத்தனை அறிவாளி மாணவர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள்? புலிகளின் கட்டுப்பாட்டில் வடக்கு கிழக்கு வந்த பின் அவ்வாறு நடந்ததா? எதிரிகளைப் பிடித்தார்கள் - விசாரித்தார்கள் - விடுதலை செய்தார்கள். மற்ற இயக்கங்கள் பிடித்தவர்களை விசாரித்தார்களா? பிடித்தவுடன் சுட்டார்கள். இதனைப் புலிகள் செய்தார்களா? நீர் கனடாவில் இருப்பதே ஓர் அகதி அந்தஸ்தில், உம்மைக் கனடா அரசு வைத்துப் பராமரிக்கக் காரணமே தமிழர் பிரச்சினை என்பதை நீர் மறந்து விட்டீர். நீர் வடக்கு கிழக்கில் தற்போது தங்கியிருந்தால் இவ்வாறு எழுதியிருக்க மாட்டீர். கொழும்பில் வெளிநாடு போக என தங்கியிருக்கும் தமிழ் இளைஞர்கள், யுவதிகளை புலிகள் என்று லொட்ஜுகளில் ஒரு தமிழ் இயக்கம் பொலிஸாருடன் சேர்ந்து கைது செய்துள்ளதே. இது உமக்குத் தெரியவில்லையா? நீரா தமிழ் மக்களின் நலனில் அக்கறை கொண்டனீர்?

அ. ரஞ்சித்குமார்
கந்தரோடை
சுன்ஞகம்.



நிலைமையின் பாற் பட்டதல்ல.

...ளும் நண்பர்களும் ...ம் அவ்வப்போது ...தழ்களைப் படித்து ...வ 'நேரடி' மற்றும் ...களில் இறங்கி விடு...

...லிருந்து இதுவரை ...ளைத் தொடர்ச் ...டக்க முடிந்த எந்த, ... ஒரு தெளிவான ...டிலிருந்தே தனது ...ர்வையையும் முன் ...ரிய வரும்.

...டையாது. சரிநிகரி... ... மேலும் சரிநிகர்

... இயக்கத் தையோ, ...துமல்ல, சாரப் ...னால் சரிநிகருக் ...ரசியல் பார்வை ...தமல்ல..

... சுயநிர்ணய உரி... ...வேண்டும் என்று ... வலியுறுத்துகிற ...களுடன் சேர்த்து ...னநாயக விரோ... ...ரிக்கிற போது எம் ...ங்களுடன் இனங் ...வ்வகையிலும் நடு...

எம்முடைய தளம் கருத்துக்களின் தளம்; சிந்தனையின் தளம். எங்களுடைய கருத்துக்களையும் சிந்தனையையும் கருத் துத் தளத்திலும் சிந்தனைத் தளத்திலும் சந்தியுங்கள்; முகம் கொடுங்கள். ரஷ்யப் புரட்சியின் கவிஞன் மாயா கோவ்ஸ்கி ஒரு முறை எழுதினான்;

நான் விரும்புகிறேன்;
வேலை முடிவில்
ஆலை நிர்வாகம்
என்னுடைய இதழ்களுக்குப்
பூட்டுப் போடட்டும் என்று......
நான் விரும்புகிறேன்..
துப்பாக்கியோடு சரிநிகராக
இரும்புத் தொழிற்றுறையில்
பேனாவும் வைக்கப்படட்டும் என்று..
நான் விரும்புகிறேன்..
பொலிற் பீரோக் கூட்டத் தொடரின்
முதலாவது விவாத அம்சமாக
'கவிதைத் தயாரிப்பு' பற்றிய
ஸ்டாலினின் அறிக்கை இருக்கட்டு
மென.......

பேனா துப்பாக்கியை விடப் பலம் வாய்ந்ததா அல்லது பேனாவும் துப்பாக்கியும் சரிநிகராகவே இருக்கின்றதா என்பதல்ல எம்முடைய கேள்வி. இதழ்கள் பூட்டப்படாமல் இருக்கட்டும்; பேனா பேனாவாகவே இருக்கட்டும்.

-ஆசிரியர் -

## ...ன்ன நடந்திருக்கும்!

...நிகர் இதழ் 6 வாசகர் கருத்து ...தியில் திரு குமாரசிங்கம் என்பவர் , ...றாத், முஸ்லிம் ஊர்காவல் படை ...கியன அரசு படைகளுடன் ...ணைந்து தமிழினப் படுகொலைகளில் ...பட்டுள்ளன எனும் குற்றச்சாட்டை ...ழப்பியுள்ளார். இக்குற்றச்சாட்டு ...ண்மையானதல்ல என்பதை சிறுபிர...ம் மூலம் நான் வெளியிட்டிருந்தேன். ...து . சரிநிகரிலும். மறு பிரசுரமா...ிருந்தது. சரிநிகருக்கு எனது நன்றி ... இது விடயத்தில் மேலும் சில ...டயங்களை தெளிவு படுத்தலாமென ...னைக்கிறேன்.

...ஸ்லிம்கள் தமக்கோ, தமது ...ர்க்கத்துக்கோ ஆபத்து வரும் போது ...றாத் செய்வது அவர்களின் மார்க்கக் கடமைகளில் ஒன்று. இது தனி விஷயம். ஆனால் ஜிஹாத் என்றொரு படை இருப்பதாக அடிக்கடி சில தமிழர்கள் சொல்லி வருகின்றனர். அப்படிஒரு படை இருக்கிறதா. இல்லையா என்பதை ஆராய்வது எனது நோக்கமல்ல. ஒரு விவாதத்துக்காக அப்படித்தான் இருக்கிறது என வைத்துக் கொண்டாலும் ஏம்முன் சில கேள்விகள் எழுகின்றன. அவை;

ஜிஹாத் படையினர் ன் தமிழ் மக்களுக்கெதிராக செயல படுகின்றனர்? அவ்வாறு அவர்கள் செயல்படுவதற்கு அவர்களை நிர்ப்பந்தித்தவர்கள் யார்? நிச்சயம் தமிழ் போராளிகள் தான் என எவரும் கூறுவர். 1985 தமிழ்-முஸ்லிம் கலவரத்துக்கு முன் இப்படி ஒரு பெயரையே நாம் கேள்விப்படவில்லை. இக்கலவரத்தின்பின் தான் இப் பெயரை கேள்விப்படுகிறோம். அதிலும் பல வதந்திகள். இனக்கலவரம் ஒன்று ஏற்பட்டால் பலரும் மோதிக்கொள்வர். பலவித வதந்திகளும் வெளிவரும் முஸ்லிம்கள் தரப்பில் பதில் தாக்குதலில் ஈடுபடுவோரை ஜிஹாத் என சொல்லிக்கொள்வது தமிழரின் மரபாகி விட்டது என்பதை நானும் கிழக்கைச் சேர்ந்தவன் என்பதால் உறுதியாகக் கூறுகிறேன்.

எனது அன்புத்தம்பி அக்றம் அப்துல் மஜீத் அவர்கள் - மணமுடித்து 5 மாதங்களும் இலலை-கடநத 1990, ஏப்ரலில் விடுதலைப்புலிகள் அவரது வீட்டுக்கு வந்து விசாரணை, ஜிஹாத் என்ற பெயரில் பிடித்துச்சென்றனர். இதுவரை அவரைப்பற்றி எந்தச் செய்தியும் இல்லை. அரசு - புலி மோதல் ஏற்'டுமுன்னர் அவருக்கு மாற்றுடை வழ..க எமது குடும்பத்தினர் முயன்றபோது அதற்கும் மறுக்கப் பட்டது. அவரது முகத்தைக்கூட எவருக்கும் காட்ட மறுத்து விட்டனர்.

முஸ்லிம் ஊர்காவல் படை எப்போது ஏற்படுத்தப்பட்டது என்பது கூட அன்பர் குமாரசிங்கம் அவர்களுக்குத் தெரியவில்லை. 1990 ஜுலை, 12ந் திகதி ஒந்தாச்சிமடம் எனுமிடத்தில் சுமார் 200 முஸ்லிம் ஆண் பெண்கள் படுகொலை செய்யப்பட்டனர். அவர்களில் எனது அன்புத்தந்தை வை. அப்துல் மஜீத் மௌலவி அவர்களும் ஒருவர். ஆம். என் தம்பியை புலிகளிடமிருந்து மீட்க முடியாதா என்ற முயற்சியில் தியாகியாகி விட்டார்கள். அவ்வேளைமுஸ்லிம் ஊர்காவல்படை நியமிக்கப்பட்டிருந்ததா? காத்தான்குடி பள்ளியில் முஸ்லிம்கள் கோழைத்தனமாக கொல்லப்பட்டபோது மேற்படி படை இருந்ததா? ஏறாவூரின் போது..? இத்தகைய வெறித்தனங்களின் பிறகு தான் அரசு-அதுவும் பலத்த கோரிக் கையின் பின் மு.ஊர்காவல்படையை நியமித்தது. இதுவரை எங்காவது தமிழ் மக்கள் கும்பலாக அல்லது கோவிலில் வைத்து கொல்லப்பட்டதாக ஒன்றை ஆதாரத்துடன் நிரூபிக்க முடியுமா? முடியாது. சிறு சம்பவங்கள், அதுவும் பதிலடியாகத்தான்.

இப்போது நான் கேட்கிறேன், எனது நிலையில் தனது தம்பியையும், தந்தையையும் ஒரு சமூகத்தின் வெறிக்கு அநியாயமாகப்பறி கொடுத்த நிலையில் திரு குமாரசிங்கம் இருந்தால் அவர் என்ன செய்வார்? நான் ஒரு எழுத்தாளன், அதிலும் கோழை.அதனால் பொறுமையாக இருக்கின்றேன். நான் ஒரு வீரனாக - பழிக்குப்பழி, இரத்தத்திற்கு இரத்தம் என எண்ணும் தமிழ் சினிமா கதாநாயகன் போன்றிருந்தால் என்ன நடந்திருக்கும்.

காத்தான் குடியிலும், ஏறாவூரிலும் என்னைப்போல் எத்தனை பேர் உருவாக்கப்பட்டிருப்பார்கள்? அவர்களெல்லாம் என்னைப்போல் கோழை மகனாக, கையாலாகாத அண்ணனாக இருப்பார்களா?

தமிழ் மக்கள் ஒன்றை நன்றாக சிந்திக்க வேண்டும். முஸ்லிம்கள் தமிழர்களை சந்தேகக் கண் கொண்டு நோக்குகிறார்கள். இதற்கு வழி அமைத்தவர்கள் தமிழர்கள் தான். இதுவரை நடந்த மோதல்களிலும் முஸ்லிம்கள் முதல் தாக்குதலை ஆரம்பித்ததில்லை என்பதையும் நாம் தெரிந்து கொள்ள வேண்டும். நடந்தவை நடந்தவையாக அமையட்டும். இனி நடப்பவையாவது நிதானமாய் அமையட்டும்.

முபாறக் அப்துல் மஜீத் நத்வி,
55/ 5, ஸாவியா லேன்,
கொழும்பு-15

## யார் பாஸிஸ்ட் ?

உலகிலே எந்தவொரு சமுதாயமும் வேற்றுமையுடன தான் இருக்கிறது அமெரிக்காவில் கூட நிறவெறி இருப்பதை திரு.துளசி மறந்தது வியப்பாக உள்ளது மக்களை வேதனைகளும் சோதனைகளும் 'சூழ்ந்திருக்கும் போது கடுமையாக விமர்சிக்காதீர்கள் பிறதேசங்களில் இருந்து எமது மக்களை இழிவுபடுத்தாதீர்கள். மக்களுடன் மக்களாக சேர்ந்திருந்து தவறுகளை சுட்டிக் காட்டுங்கள். புலிகள் யார்? தமிழ் மக்களின் மைந்தர்கள் தானே. மறந்து விடா தீர்கள். புலிகள் எப்போதும் மக்களை போராட்டத்துடன் இணையுமாறு கேட்டு வந்துள்ளார்கள். விலகிநிற்கும் படி சொன்னதேயில்லை. போராட்ட தலைமைசரியில்லை என கூறுகிறீர்கள். ஆனுல் ஒன்று மட்டும் உண்மை புலிகளால் எங்களுக்கு விடிவு பெற்று தரப்படாவிட்டால் வேறு யாராலும் பெற்றுதரப்பட முடியாது.

தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைகளுக்காகதான் புலிகள் போராடுகிருர்கள். சந்தேகமே வேண்டாம். தியாகி திலீபன் உண்ணுவிரதம் இருக்கும் போது புலிகள் 5 கோரிக்கைகளை முன்வைத்தார்கள் அவற்றில் ஏதாவது ஒரு கோரிக்கையை யாவது தங்களுக்காக கேட்டார்களா?

தமிழ் பகுதிகளுக்கு சுயமாக சென்று பார்வையிட்டு வந்த சு.க. உறுப்பினர் ஜெயராஜ் பெர்ஞன்டோபிள்ளை கூறியது என்ன? காளான்கள் போன்று முளைத்துள்ள தமிழ் கட்சிகளை விட்டு விட்டு மக்கள் ஆதரவு சக்தியான புலிகளுடன் பேசுங்கள் என்ருர். அவரும் புலியின் வாலா?

புலிகளின் மனித விரோத செயல் பற்றி கூறும் வாசகரே மாற்று இயக்கங்கள் இந்திய இராணுவத்துடன் சேர்ந்து புலிகளை சுட்டு வீதி வீதியாக இழுத்து திரிந்தபோது உங்கள் மனிதாபிமானம்' எங்கே போனது?

பாஸிஸம், பாஸிஸம் என்று பாஸிஸ்டுகளே கத்துவது வேடிக்கையாகவும் வேதனையாகவும் உள்ளது.

செ. சுதர்சன்
சு.நவனீதன்
நெல்லியடி

## ஈமானைக் கொன்ற நூறுல்.

சரிநிகர்-4 இதழில் நான் எழுதிய-ஆயுதபலத்தில் நம்பிக்கையற்ற புதிய தலைமுறை தேவை என்ற கட்டுரைக்கு பதிலடியாக ஒரு சிறு குறிப்பை சரிநிகர் -6 இதழில் இஸ்லாத்தை கருவறுக்கும் நிஸார் என்ற தலைப்பில் எழுதியிருந்தார் நண்பர் நூறுல் ஹக் என்பவர்.

நண்பரின் சிறு குறிப்பில் எழுந்த சந்தேகத்திற்கு பதிலளிப்பதில் ஒரு புறம் மகிழ்சியடையும் நேரத்தில், மார்க்க சம்பந்தமான ஒரு விடயத்தில் தெளிந்த ஞானம்பெற்ற மார்க்க அறிஞர்கள் மோதிக் கொள்ள வேண்டிய வேளையில் மத்ரஸா படிகளைத் தொடாத நண்பர் நூறுல் ஹக்கும் நானும் எவ்வாறு சர்ச்சைப்படுவது என்ற அச்சத்துடன் எனது பதிலுரையைத் தொடருகிறேன்.

எனது கட்டுரையில் குறிப்பிட்ட சர்ச்சைக் குரிய விடயம் பின்வருமாறு:

"ஆயுதங்களில் நம்பிக்கை வைத்து முஸ்லிம் சமூகத்தின் பாதுகாப்பினைக் கோருவது எல்லாம் வல்ல இறைவனுக்குச்செய்யும் துரோகம் மாத்திரமல்ல அவனுக்கு இழைக்கும் கொடூரச் செயலுக்கு ஒப்பானதாகும்......"

அதாவது, நான் சுருக்கமாகக் கருதியது:
எல்லாம் வல்ல இறைவனிலேயே முற்றிலும் நம்பிக்கை வைக்க வேண்டுமேயொழிய ஆயுதங்களில் அல்ல என்பது. மேலும் அவ்வாறு ஆயுதங்களில் முற்றிலும் நம்பிக்கை வைப்பது அல்லாஹ்விற்கு 'ஷிர்க்' வைப்பதைப் போன்ற கொடூரச் செயலாகும்.

இது இஸ்லாத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட மூலாதாரங்களான அல்குர்ஆன், அல் ஹதீஸ், இஜ்மாஃ, கியாஸ் போன்றவற்றில் எதற்கு முரணானது என்பதை நண்பர் கூறுவாரா?

மேலே குறிப்பிட்ட கருத்து, முஸ்லிம்கள் ஆயுதம் தரிப்பதும்பயிற்சி பெற்றிருப்பதும் இஸ்லாமிய கோட்பாடுகளுக்கு முரண்பாடான கைங்கரியமாகும் என அர்த்தம் கொள்வதாக குறைபட்டிருந்தார் நூறுல் ஹக்.
அப்படியானால் நண்பரின் கருத்திலிருந்து (அது இஸ்லாமியக் கருத்தல்ல) மூன்று வினாக்கள் எழுகின்றன.

ஆயுதத்தில் முற்றிலும் நம்பிக்கை வைத்து ஆயுதப்பயிற்சி' பெறுவதும், ஆயுதம் தரிப்பதும் முஸ்லிம் சமூகத்திற்கு பாதுகாப்பளிக்கும் என்பது ஒன்று—

அல்லாஹ்வில் முற்றிலும் நம்பிக்கை வைத்து (ஆயுதத்தில் அறவே நம்பிக்கை வைக்காமல்) ஆயுதப் பயிற்சி பெறுவதும் ஆயுதங்களைத் தரிப்பதும் (எதிரிகளுக்கு பயம் ஊட்டுவதற்காக) முஸ்லிம் சமூகத்திற்கு பாதுகாப்பளிக்கும், என்பது இரண்டாவது.

அல்லாஹ்விலும் ஆயுதத்திலும் நம்பிக்கை வைத்து ஒரு சமூகத்தின் பாதுகாப்பைத் தேடுவது என்பது மூன்றாவது கருத்து, இந்த மூன்றில் எதை நூறுல் ஹக் ஈமான் (நம்பிக்கை) கொள்கிறார்?

முதலாவது, இரண்டாவது கருத்துக்களை அவர் நம்பினால் அவர் நூறுல் ஹக் (உண்மை) என்ற ஸ்தானத்திலிருந்து நூறுல் பாத்திலாக (பொய்) மாறி விடுவார்.

இரண்டாவது. கருத்தை ஏற்றுக் கொண்டால், இஸ்லாத்தைக் கருவறுக்கும் நிஸார் என்று குற்றஞ்சாட்டிய நூறுல் ஹக்குக்கு மனக்கோளாறா என்று கருத வேண்டியிருக்கிறது.

இரண்டாவது கருத்தே எனது கட்டுரையில் குறிப்பிட்ட பந்தியில் தொனித்தது.

எனினும், இரண்டாவது கருத்துக்கும், சரிநிகர் 4 இல் எழுதிய கருத்துக்கும் ஒரு சிறு வித்தியாசமுள்ளது. எனது கட்டுரையில் ஆயுதப்பயிற்சி பெறுவதைப்பற்றியோ ஆயுதந்தரிப்பது பற்றியோ நான் நேரடியாகக் குறிப்பிடவுமில்லை, அது எனது நோக்கமுமல்ல மாறாக, முஸ்லிம் சமூகப்பாதுகாப்புக்கு எல்லாம் வல்லஇறைவனில் முழுக்க முழுக்க நம்பிக்கை கொள்வதைப்பற்றியும், ஆயுதங்கள், முஸ்லிம்களுக்கு பாதுகாப்பளிக்கும் அல்லாஹ்வின் ஸ்தானத்தை நிரப்பா....என்றே, நான் கருதியிருந்தேன்.

——→ பக்: 11

நன்றி - நூலகத்திட்டம்





**19 பெப்ரவரி 1991**
**நுகே கொடைச் சந்தி**
**பிற்பகல் 3.00 மணி**

புதிய நகர மண்டபத்திலிருந்து மைதானத்துக்குள் அன்னையர் திரளாக வந்து கொண்டிருக்கிறார்கள். சுலோகங்களும் சுவரொட்டிகளும் உரத்த குரலில் கேட்கும் கேள்வி:

'எங்கே எங்களுடைய பிள்ளைகள் ?

எங்களுடைய புதல்வர்களைத் திருப்பித் தாருங்கள்!"

'தென்னிலங்கையின் எல்லா மாவட்டங்களிலிருந்தும் பதாகைகள் தாங்கியபடி வருகின்ற அன்னையர்.

நிகழ்ச்சி அமைப்பாளர் ஒரு ஆண், வந்திருக்கும் அனைவருக்கும் நன்றி தெரிவித்துவிட்டு உரையாற்றவிருக்கும் பிரமுகர்களைப் பற்றிச் சொல்கிறார். அம்மணி சிறீமாவோ, வாசு இன்னும்....

மேடையில், நிழல் தாராளமாக வீழ்ந்து கொண்டிருக்கும் பகுதியில் பெரும்பாலும் ஆண்களே அமர்ந்துள்ளனர். ஓரிரண்டு தாய்மார்களும் கூட. பெரும் எண்ணிக்கையான அன்னையர் மேடையின் அடியில், எரியும் வெய்யிலில் வெள்ளைச் சேலை மேலும் ஒளிர அமர்ந்திருக்கிறார்கள்.

கூட்டம் ஆரம்பமாகிற போது பத்திரிகையாளர்கள், படப்பிடிப்பாளர் வீடியோகாரர் என ஒரு அவிழ்த்து விடப்பட்ட மந்தைக் கூட்டம் மேடையைச் சூழ்கிறது. பேச்சாளர்களை அசட்டை செய்யும் லாவகத்தில் அன்னையர் குரலும் அவ்வப்போது அசட்டை செய்யப் படுவதான தோற்றம்.

யாராவது ஒரு அரசியல் பிரமுகர் வருகிறபோதெல்லாம் பத்திரிகையாளரும் வீடியோக்காரரும் சலசலப்படைகிறார்கள். இடைப்பிறவரல், மேடை நிகழ்வை அடிக்கடி குழப்புகிறது. இப்போது மேடையில் ஐந்து ஆண்களுக்கு ஒரு பெண் என்ற விகிதத்தில் ஆட்கள். சிறிலங்கா சுதந்திர கட்சி (SLFP) யின் ஆண் உறுப்பினர் கூட்டத்தை ஆரம்பிக்கிறார்கள். காணாமல் போன 60,000 துக்கும் மேற்பட்டவர்களில் ஒருவரின் தகப்பனார் பேசுகிறார். குறிப்பாக, நேராக விஷ ;துடன்: எங்கள் பிள்ளைகளைத் தா!

மனோராணி சரவணமுத்து (கொலை செய்யப்பட்ட கலைஞன் றிச்சாட் டீ ஸொய்ஸாவின் அன்னையும் அன்னையர் முன்னணியின் முக்கிய உறுப்பினரும் ) மேடையினோரமாக அமர்ந்திருக்கிறார், கொஞ்ச. நேரம். மேலும் மேலும் அரசியல்வாதிகள் மேடையை ஆக்கிரமிக்கவும், மனோராணி மெதுவாக மேடையை விட்டு இறங்கி விடுகிறார். கீழே வெய்யிலில் அமர்ந்திருக்கும் அன்னையரோடு தாழ்ந்த குரலில் அவர் பேசிக் கொண்டிருப்பதைப் பின்னர் நான் காண்கிறேன்.

எல்லோரும் பேசிய பிற்பாடு மனோராணி உரையாற்றியது நல்லது என்றுதான் பட்டது. கூட்டம் நிறைய சேர்ந்திருந்தது. தெளிவான, எளிமையான மொழியில் அவரது பேச்சு அனைவரது இதயத்தையும் அசைக்கிறது.

"இங்கு வந்திருக்கும் எல்லாத் தாய்மாரையும் போலவே என்னுடைய கைப்பையில் என்னுடைய மகனது படத்தை வைத்திருக்கிறேன். நானும் உங்களில் ஒருத்தி....."

மேடையில் ஆணாதிக்கம் ஏற்பட்டு விட்டமையை அவதானித்தோ என்னவோ மஹிந்த ராஜபக்ஸ (பா.உ) அன்னையர் சிலரை மேடையில் வந்து அமருமாறு அழைக்கிறார். நூற்றுக் கணக்கான அன்னையர் மேடையில் நின்று உயர்த்திய குரலுடன் உயர்த்திய கரங்களுடன் " எங்கள் குழந்தைகள் எங்கே ?" என்று சத்தமிட்டிருந்தால் ஏதாவது அற்புதம் நிகழ்ந்து விட்டிருக்குமோ என்று கூட எனக்குத் தோன்றிற்று.

எல்லாத் தாய்மாரின் கண்களைச் சுற்றியும் ஆழமான கறுப்பு வட்டம், தூங்கா இரவுகளும் தொடரும் கண்ணீரும், பூமியில் விளைந்த நரகம் புனைந்த வினை. பத்துப் பத்து நிமிடங்கள் அன்னையருக்கு ஒழுங்கு முறையில் வழங்கப் படுகிறது. ஆச்சரியம் தரும் வகையில் பேசிய எல்லா அன்னையருமே எப்போது தங்கள் மகனை/ மகளை இறுதியாகப் பார்த்தோம் என்பதை திகதி மாதம், நேரம் வாரியாகச் சொல்கிறார்கள். தனது இரண்டு பெண்களையும் 'தொலைத்து' விட்ட ஒரு தாயின் துயரம் திடீரென்று அரங்கில் கவிகிறது.

கூட்டநெரிசலிலும் வெய்யிலிலும் சில தாய்மார்கள் மயங்கி விழுகிறார்கள். மேடையிலிருந்து யாரோ ஒருவர் அன்னையரிடம் இருந்து காணாமல் போனவர்கள் பற்றிய விவரமடங்கிய கடிதங்களைக் கேட்கிறார். (ஆண்!) கூட்டத் திலிருந்து கடிதங்களுடன் ஆயிரமாயிரம் கரங்கள் உயர்கின்றன. கமெராவுடன் மேடைக்குச் சற்று அருகாக நான் செல்கிறேன்.

' யார் நீ மனிதப் புழுவே ' என்றபார்வையில் அமைப்பாளன் ஒருவன் என்னைத் தடுக்கிறான். 'நீ C. I. D. !" என்கிறான். நீண்ட நேரமாக அவர்கள் என்னைப் பார்த்திருக்க வேண்டும். என்னுடைய கால்சட்டையும் நெடுமுடியும் பெருங் கமெராவும் அவனுக்கு விநோதமாகப் பட்டிருக்க வேண்டும்.

மெல்லத் திரும்பி 'குமி' யைச் சுட்டிக் காட்டுகிறேன். 'அவளைப் போய்க் கேள்! " நான் யாரென்பது தெரியும் !" அவன் நிச்சயமாகவே ஒரு ' உலக்கை ' யாகத் தான் இருக்க முடியும். ஏகப்பட்ட கமெராக்கள், ஏகப்பட்ட பத்திரிக்கையாளர்கள், வகை வகையான தொலை நோக்கி லென்சுகள் ஆரவாரப்படும் இந்த இடத்தில் இவனுக்கு அண்மையில் வராமலேயே இவனுடைய மூக்குக்குள் இருக்கும் ரோமத்தைக் கூட இப்போது படமெடுத்து விடமுடியும் என இவன் அறியாதது சிரிப்புத்தான். என்ன இருந்தாலும் அன்னையரின் புரவலனாக அல்லவா அவன் பாசாங்கு செய்கிறான். பிறகு கரங்களைக் குலுக்கிக் கொள்கிறோம் ஒரு சிறு புன்னகையோடு.

பேச்சாளர்களை அசட்டை செய்வது உச்சமாகிப் போய்விட்டது இப்போது. ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (EPRLF) பிரதிநிதி. பேசுகிறார். அதே நேரம் அம்மணி பண்டார நாயக்க உள் நுழைகிறார். எல்லாவற்றையும் தலை கீழாக்கி, பேச்சாளரையும் மறைத்தபடி இந்த எருமைப் பத்திரிகையாளர்கள் அம்மணியிடம் விரைகிறார்கள். EPRLF பிரதிநிதிதான் ஒரேயொரு தமிழ்ப் பேச்சாளர் என்ற வகையில் அவருடைய பேச்சும், அவரும் கூட உயர்ந்த கௌரவத்துக்குட்படுத்தப்பட்டிருக்க வேண்டும். ஆனால், தமிழுக்கான ஒரு ' டோக்கன் ' பிரதிநிதித்துவமாகவே அது ஆகிவிட்டது.

நிச்சயமாகவே அன்னையர் முன்னணிக் கூட்டம் அரசியல் அரங்காகவே போயிற்று. பண்டாரநாயக்க குடும்பம் மொத்தமாகவே (எல்லா அர்த்தத்திலும்) மேடையில் அமர/ அதிர அன்னையர் முன்னணி - Family - Re-united Front ஆகவே போய் விட்டது.

20 அன்னையரின் அனுபவ உரைதான் முழுக்கூட்டத்திற்குமே உயிர் தந்தது. அன்னையரின் சோகம் தோய்ந்த வாக்குமூலங்களின் முன்னால் அரசியல் வாதிகளின் கோஷமும், குற்றத்திலிருந்து தன் விடுதலை பெற முயலும் நோக்கும், பிரசாரமும் வெற்றுப் பேச்சாயின.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி தன்னுடைய அரசியல் நலன்களுக்காக அன்னையர் முன்னணியைப் பாவிக்க முனைவது தெளிவாகவே தெரிந்தது: திருப்பித் திருப்பி 1971 இளைஞர் எழுச்சியின் போது தாம் இவ்வகையான அநியாயங்களைச் செய்யவில்லை என்றும், இன்றைய நிலையை அன்றுடன் ஒப்பிட முடியாது என்றும், தம்முடைய வரலாற்றுப் பழிகளிலிருந்து தப்பப் பார்த்தார்கள்.

வாசுதேவ நாணயக்காரவும் மஹிந்த ராஜ பக்ஸவும் மட்டுமே அன்னையர் முன்னணி தொடர்பானதும் அது எதிர் நோக்க வேண்டியதுமான முக்கிய பிரச்சினைகளைப் பற்றிப் பேசினார்கள். எவ்வாறு ரஞ்சன் விஜேரத்னவும் ஐ.தே.க.வும் 'பயமுறுத்தல்' நடவடிக்கைகளில் ஈடுபட்டது என்பதை அம்பலமாக்கினார்கள்.

சந்திரிகா குமாரணதுங்க பேசுகிறபோது ஒரு முக்கியமான அம்சத்தை வலியுறுத்தினார்: அன்னையரே! போராட்டத்தை உங்கள் கரங்களில் எடுத்து உங்கள் போராட்டமாக மாற்றுங்கள்! ●

# தேசியவிடுதலைப் போரும் பெண்ணிலை வாதமும்

பாஞ்சாலி

எமது சமூகம் யுத்தத்தின் பிடியில் கடந்த 8 வருடங்களாக இருந்து வந்துள்ளது. பாரதூரமான சமூகப் பொருளாதார அரசியல் மாற்றங்களை நமது சமூகம் எதிர்கொண்டு வருகிறது. இந்த நிலையில் நமது சமுதாயத்தில் பெண்களின் நிலை எவ்வாறு மாற்றமடைந்துள்ளது என ஆராய்தல் பொருத்தமானதாகும். மேலும் தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டக்களத்தில் உள்ள போராளிக் குழுக்களின் பெண்கள் அமைப்புக்கள் பெண்விடுதலையை முன்னெடுப்பதில் எவ்வளவு தூரம் வெற்றியடைந்துள்ளன என்பதையும் அப்படித் தோல்வியைத்தான் தழுவி உள்ளவாயின் அதற்கான காரணங்களை அறிந்து கொள்வது எதிர்கால நடவடிக்கைகளுக்கும் திட்டங்களுக்கும் பெருமளவு உதவும்.

போராளிக் குழுக்களின் பெண்கள் அமைப்புக்களின் பங்களிப்புப் பற்றி மட்டும் ஆராய்வதற்குக் காரணங்கள் உண்டு. முதலாவதாக, அன்னையர் முன்னணி போன்ற பெரும் பெண்கள் அமைப்புக்கள் (இவை மிகவும் சிலவே) தோன்றிய போதும் இவை பெண் நிலைவாதத்தை முன்னெடுப்பதற்கென உருவாகியன அல்ல. மாறுக காலத்தின் தேவையை ஒட்டி உருவாகிய அமுக்கக் குழுக்களே (Pressure groups) அவை. இரண்டாவதாக, பெண்நிலைவாதத்தை முன்னெடுக்க வேறு ஒரு சில அமைப்புக்கள் உருவாக்கப்பட்ட போதும் அவை சமுதாயத்தில் பெருமளவு தாக்கத்தை ஏற்படுத்தவில்லை.

ஈரோஸ் தவிர்ந்த அனேகமான ஏனைய போராளிக் குழுக்கள் ஒவ்வொரு பெண்கள் அமைப்புக்களை அமைத்துக் கொண்டமை உண்மையே. ஆனல் இவ்வாறு பெண்கள் அமைப்புக்களை அமைத்து விடுதல் மட்டும் அவ்வியக்கத்தில் பரவலாக பெண் நிலைவாதம் பற்றிய விழிப்புணர்வு இருந்தமையைக் குறிக்காது. ஒவ்வொரு இயக்கத்திலும் ஒரு சில பெண்கள் (கைவிட்டு எண்ணக்கூடிய ஒரு சிலர் மட்டுமே என்பது எனது கருத்து) பெண்நிலைவாதிகளாக இருந்தாலும் அவர்களால் தமது இயக்கத்தின் ஆணாதிக்க கருத்தியலை (patriarchal ideology) மாற்றவோ அல்லது சமுதாயத்தில் ஒரு பரவலான விழிப்புணர்வை ஏற்படுத்தவோ முடியவில்லை. E.P.R.L.F. இயக்கம் விடுதலைப் புலிகள் இயக்கத்திஞல் கலைக்கப்பட்ட போது நிகழ்ந்த ஒரு சம்பவம் இதற்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டாகும்.

ஈ.பி.ஆர்.எல்.எப். இயக்கம் கலைக்கப் பட்டபோது பல ஈ.பி.ஆர்.எல்.எப். பெண்கள் எல்.ரி.ரி.ஈ யினுல் அடிக்கப் பட்டார்கள். L.T.T.E யின் ஒரு முன்னணி உறுப்பினர் அடிக்கும் போது கூறியது, "உங்களுக்கு என்ன விடுதலை, போய்க் குசினிக்குள் இருங்கோ. அது தான் உங்களுக்குச் சரியான இடம்." (முறிந்த பனை, பக்கம் 327). என்பதாகும்.

விடுதலைப் புலிகளின் பெண்கள் அமைப்பான சுதந்திரப் பறவைகள் அமைப்பினுல் கடந்த ஆண்டு வைகாசி மாதம் வின்ஸர் தியேட்டரில் ஒரு கூட்டம் நடத்தப்பட்டது. அதில் பத்து அம்சப் பிரகடனம் ஒன்றும் முன்வைக்கப்பட்டது. பெண்நிலைவாத வரலாற்றில் ஒரு முக்கிய மைல் கல்லாக இது பலருக்குப்படலாம். ஆனுல் இச்சம்பவம் நிகழ்ந்த போது வடக்கு கிழக்கில் நிலவிய அரசியற் சூழலை நாம் மறந்து விடலாகாது. அக்காலகட்டத்திலேயே விடுதலைப் புலிகள் மிகவும் பரந்தளவில் ஆட்சேர்ப்பில் ஈடுபட்டிருந்தார்கள். 11 வயது நிரம்பிய சிறுர்களைக் கொண்டு "மழலைப்பட்டாளங்களைக் "கூடவரற்ற காலம் அது. எனவே பெண்விடுதலை என்ற கோஷத்தை ஆட்சேர்ப்புக்கு ஒரு தளமாகப் பாவித்தார்களோ என எண்ணத் தூண்டுகிறது.

போராளிக் குழுக்கள் இவ்வாறு பெண்கள் அமைப்புகளை நிறுவிய போதும் பெண்நிலைவாதக் கருத்துக்கள் பரந்துபட்ட மக்களிடம் செல்லாததற்கான காரணம் என்ன? போராளிக் குழுக்களின் பொதுவான குணும்சம், அதாவது மக்களிடம் இருந்து அந்நியப்பட்டுக் (alienated)காணப்பட்டமை ஒரு காரணமாகும். ஆதிக்கத்தில் இருந்த/ இருக்கின்ற ஒவ்வொரு .போராளிக் குழுவும் ஆளும் வர்க்கத்திற்குரிய அதிகார வெறி கொண்டிருந்தமையை யாரும் மறுக்க இயலாது.

அடுத்ததாக இப்பெண்கள் அமைப்புக்களிடம் ஒரு திட்டவட்டமானநிகழ்ச்சித்திட்டம் (working programme) இருக்கவில்லை. எனவே இவ் அமைப்புக்கள் வெறுமனே சர்வதேசப் பெண்கள் தினத்தைக் கொண்டாடுவதிலும், பத்து அம்ச பிரகடனங்களை நிறைவேற்றுவதிலும் மட்டுமே தம்மை வரையறுத்துக் கொண்டன. எனவே இப்பெண்கள் அமைப்புக்கள் எவையும் நமது சமூகத்தில் உள்ள பெரும்பான்மையான பெண்களின் மீது எதுவித தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை. இயக்கத்தைச் சேர்ந்த பெண்கள் காற்சட்டையுடனும் துவக்குகளுடனும் "பஜேரோ"க்களில் சென்ற போதும் பெரும்பான்மையான பெண்கள் வயல்களிலும் தொழிற்கூடங்களிலும், ஏன் சொந்தக் குடும்பங்களிலும் கூட சுரண்டலுக்கும் அடக்குமுறைக்கும் ஆளாகியே காணப்பட்டார்கள். இவர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட எந்தப் பெண்கள் அமைப்பும் முன்வரவில்லை.

விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரையில், ஆயுதம் ஏந்திப் பெண்களும் போராடத் தொடங்கியவுடன் பெண் விடுதலையும் வழிதொடரும் என்ற நிலைப்பாடே தலையோங்கிக் காணப்பட்டது. இக்கட்டத்தில், வின்ஸர் தியேட்டரில் நடைபெற்ற மாகாநாட்டில் விடுதலைப் புலிகளின் முன்னணி உறுப்பினர் காலம் சென்ற சுந்தரி பின்வருமாறு பேசினுர். "தமிழீழப் பெண்கள் இன்று விடுதலைப் போராட்டக்களத்தில் குதித்திருக்கிறுர்கள். மகளிர் படைப்பிரிவு ஒன்று உருவாக்கப்பட்டு பெண்கள் ஆயுதம் தரித்து ஆண்களுடன் சரிநிகராகப் போராடும் அளவிற்கு எமது போராட்டத்தில் புரட்சிகரமான முன்னேற்றம்ஏற்பட்டிருக்கிறது."

83 - 86 காலப்பகுதியில் அப்பளமும், பிரசாரச் சஞ்சிகைகளும் விற்றும், முதலுதவிச் சிகிச்சை வகுப்புக்களை நடாத்தியும் வந்த சுதந்திரப் பறவைகள் இப்போது ஆயுதம் ஏந்தும் அளவிற்கு இயக்கத்திற்குள் வளர்ந்துள்ளமை மகிழ்ச்சிக்குரிய விடயம் தான். ஆனுல் ஆயுதம் ஏந்துவதால் பெண்கள் விடுதலையடைய முடியும் என்ற ஒரு தவறுன மனப்பாங்கு பெரும்பான்மையான இயக்கப் பெண்களிடம் இருப்பதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. ஆயுதத்தால் எல்லாவற்றையும் சாதித்துவிடலாம் என்ற நம்பிக்கையுடைய விடுதலைப்புலிகள் இயக்கத்தில் உள்ள பெண்களும் இவ்வகையான ஒரு மனப்பான்மையைக் கொண்டிருப்பதில் ஆச்சரியம் எதுவுமில்லை. மேலும் இயக்கத்துக்கு அப்பால் உள்ள பரந்துபட்ட சமூதாயத்தை ஒதுக்கும் தன்மை மற்ற இயக்கங்களிலும் காணப்பட்டது.

ஈரோஸ் இயக்கத்தைப் பொறுத்தவரையில் தனியே ஒரு பெண்கள் அமைப்பை நிறுவாமைக்குப் பின்வரும் காரணம் அவர்களால் பொதுவாக எடுத்துக் கூறப்பட்டது. 'எமது இயக்கத்தில் ஆண்களுக்கு சரிநிகர் சமானமாகப் பெண்கள் நடாத்தப்படுகிறுர்கள். எனவே எங்களுக்கு ஒருதனியான பெண்கள் அமைப்பை நிறுவ வேண்டிய அவசியம் இல்லை' என்ற வாதம் ஆகும்.

தொடரும்

# ஊருக்கு நல்லது சொல்வேன் உண்மை தெரிந்தது சொல்வேன்...



— அபுமுசா —

பழைய ஹைதராபாத்தையும் செக்கந்த ராபாத்தையும் ஒரங்கட்டுவது போல ஹூசைன் சாகர் ஏரி விரிந்து கிடக்கிறது. ஏரிக் காற்றோடு (மதியத்தில் தகிக்கும், மாலையில் உயிர்க்கும்) கூடவே நேர் கோட்டில் செல்கிறது வீதி. இடது புறம் முழுவதும் சீராகச் சிலைகள். ஆங்கா ங்கே திட்டுத் திட்டாய்ப் பச்சைப் புல்.

செக்கந்திராபாத்திலிருந்து புறப்படும் இரட்டைத் தட்டுப் பஸ் வண்டியில் ஏறி மேல்தட்டு முன் வரிசையில் உட்கார்ந்து விட்டால் ஹைதராபாத்தின் குறுக்கு வெட்டு முகம் தானே தெரிந்து விடுகிறது. தெலுங்கும் உருதுவும் திணை மயக்கத் தில் தத்தளிக்கிற இடம்: சாகரங்களும் ஏரியும் ஏக்கர் கணக்காக இருந்தும் பாலை பாடும் நிலம். நீண்ட கால இஸ்லாமியம்: என்றென்றைக்குமாக அழி க்க முடியாத படி ஆந்திர மண்ணின் மீது இரண்டறக் கலந்து பெற்ற கலாசார விகசிப்பை ஆங்காங்கே தெள்ளெனக் காணலாம். இரண்டு மாதங்களுக்கு முன்பாக நிகழ்ந்நது பயங்கரமான இந்து - முஸ்லிம் கலவரங்களின் வடுக்களென எதுவுமே இல்லை. பழைய ஹைதராபாத் தின் 60 வீதமான இஸ்லாமிய சனத் திரள்: சதாம் ஹூசைனின் வகை வகை யான போஸ்டர்கள்: சார்மினாரின் கீழே



ஹைதராபாத்: சார்மினார் - முஸ்லிம் பள்ளிவாசலும் இந்துக் கோவில்: 'சமாதான சகவாழ்வு!'

வெய்யிலில் கரைந் தொழுகும் குங்கு மப் பொட்டுடன் பொலிஸ்காரான்.

பொதுவாக ஹைதராபாத் என்றாலே திடீர் திடீரென வெடிக்கும் இந்து - முஸ் லிம் கலவரங்களே நினைவில் மேலெழும். இருநூறு வருடங்களுக்கு முன்பாக ஹைதராபாத் நகருக்குப் புலம் பெயர்ந்த பல்வேறு இனக் குழுமங்களும் அவர்களுடைய பல்வேறு கலாசாரங் களும் குறிப்பாக மார்வாரிகள், போராக் கள் போன்றவர்கள் இன்றுவரை தத்தமக் கென தனியான இடங்களிலேயே குடியி ருக்கிறார்கள்.

மார்வாரிகள் மற்றும் இந்துக்களின் சனத் தொகையும் 1940 களின் பிற்பாடு அதிக ரிப்பதும் இஸ்லாமியரின் 'பாதுகாப் பின்மை' உணர்வு மேலோங்க ஒரு கார ணமாயிற்று. ஆச்சரியமாக, 1978 வரை பெரிய இந்து - முஸ்லிம் கலவரங்கள் ஏற்படவில்லை. 1978 இல் நிகழ்ந்த முத லாவது பெரிய கலவரத்தின் பின் அண் மைக் காலங்கள் வரை ஹைதராபாத்தில் இந்து - முஸ்லிம் கலவரங்களும் ஊர டங்கு வாழ்வும் ஒருவகை வாழ்நெறி யாகவே போய் விட்டது. என்.ரி. ராமராவின் தெலுங்கு தேசம் ஆட்சியின் போது எவ்வித கலவரங்களும் ஏற்படவில்லை என்பது என்.ரி.ராமரா வின் அரசியலாலல்ல. கலவரங்களு க்குப் பொறுப்பாக இருந்து வந்த சக்திகள் என்.ரி.ஆரை ஆதரித்தன என்பதே காரணம்.

வரலாற்றை இன்று திரும்பிப் பார்க்கிறபோது, இந்தக் கலவரங்களில் இந்துக்களும் முஸ்லிம்களும் சம எண்ணிக்கையிலே கொல்லப்பட்டிருக் கிறார்கள் என்பதும் இத்தகைய கலவரங் கள் அனைத்தும் கொங்கிரஸ் (I) மஜ்லிஸ் - ஈ - இத்திஹாடுல் முஸ்லிமின் (mim) பாரதீய ஜனதா கட்சி போன்றவற்றால் தங்களுடைய சொந்த அரசியல் கட்சி நலன்களுக்காகக் திட்ட மிட்டு நடத்தப்பட்டவை என்பது தெளி வாகிறது.

ஆந்திர முதலமைச்சர் ஒருவரைப் பதவி யிலிருந்து நீக்க வேண்டுமானால், வேறொரு வழியும் இல்லாதபோது இருக் கவே இருக்கிறது 'இந்து - முஸ்லிம்' கலவரம்!. அநியாயம் என்னவென்றால் இத்தகைய கலவரங்களில் பலியாவது ஏழை (இந்து) கட்டிடத் தொழிலாளர் களும் வறிய முஸ்லிம்களும் தான்.

அண்மைய கலவரங்களுக்கு எத்தகைய அரசியல் ஆரம்பமும் இருக்கவில்லை. இரண்டு சண்டியர் கூட்டங்களுக்கி டையே ஏற்பட்ட மோதல் (கப்பம் வாங்குவது மற்றும் நிலப்பிரச்சினை தொடர்பாக) துரதிர்ஷ்ட வசமாக ஒரு சண்டியர் குழு முஸ்லிம்களாகவும் ஒன்று இந்துக்களாகவும் இருந்ததால் விரைவி லேயே இனத்துவேசம் பெற்று பெரிய கலவரமாய் மாறி விட்டது.

குழந்தைகளும் பெண்களும் அதிக எண் ணிக்கையில் கொல்லப்பட்டார்கள். ஒவ் வொரு முறை விநாயக சதுர்த்தி ஊர் வலமும், மொகராம் பண்டிகையும் வரு கிறபோது இந்து - முஸ்லிம்களுக்கிடையே கலவர பீதியும், பயமும் மேலெழுவதே வழக்கமாகப் போயிற்று. போதாததற்கு, நினைத்த நேரத்தில் கலவரங்களை ஏற் படுத்த குண்டர் படைகள் இந்துக்கள் - முஸ்லிம்கள் இரு பகுதியினரிடமுமே தயாராக உள்ளன.

ஒட்டு மொத்தமான இந்திய தேசியத்தின் (அப்படி ஒன்று இருக்கிறதா• என்ன?) பிள வுற்ற ஆளுமைச் சின்னமாக செகந்தி ராபாத்தில் மிகப் பெரிய ராமர் 'கட் அவுட்' ஒன்று நிற்கிறது. (பாரதிய ஜனதா விஸ்வ ஹிந்து பரிஷத் ஜயம்) பழைய ஹைதராபாத்தில் புகழ்பெற்ற சார்மினார் கோபுரத்தின் அருகே வீரச் சிரிப்புடன் 'ஸ்கட்' ஏவுகணைகளை வீசும் தடித்த மீசை ஸதாமின் பெரிய அளவு படங்கள்.......

இந்திய இடதுசாரி இயக்க வரலாற்றையே உலுப்பி விட்ட தெலுங்கானா கிளர்ச் சியின் வாரிசுகள் எப்படி இந்த இரு கூற் றுப் பிளவை வெல்லப் போகிறார்கள்?

எண்பதுகளின் ஆரம்பத்தில் முற்போக்கு வீச்சுடன் கிளர்ந் தெழுந்த தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட் டமும் அதனை ஒடுக்க முற் பட்ட இலங்கை அரசின் இரா ணுவ நடவடிக்கைகளும். தமிழ் மக்களில் மிகக் கணி சமான தொகையினரைப் புலம் பெயரப் பண்ணியுள் ளது. இந்தப் புலம் பெயர்ச் சியின் தொண்ணூறு வீதமான வர்களும் யாழ்ப்பாணத்த வரே என்பது மிகையல்ல.

தமிழ்ச் சமுதாயத்தைப் பொறுத்தவரை, ஒரு நீண்ட கால சமூகவியல் பார்வையில் இந்தப் 'புலப்பெயர்ச்சி' கொண்டுவரப் போவது என்ன என்பது ஒரு முக்கியமான கேள்வியாகும்.

யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்களைப் பொறுத்தவரை புலம் பெயரும் ஒரு நீண்ட காலப் பாரம்பரியம் அவர்க ளுக்கு இருந்தாலும் அவர்க ளது புலம் பெயர்தலின் இன் றியமையாத அம்சம் குடா நாட்டு வேர்களைப் பேணு வது தான். இந்தப் புலம் பெயர்தலின் இன்னுமொரு அம்சம் 'பொருள் வயில் பிரி தல்' என்று சங்க இலக்கியங்கள் கூறும் உழைப்பு, திரவியங்க ளுக்காகப் பெயர்வது. தண் ணீர் எல்லைப்படுத்தும் கார ணியாக அமைந்துள்ளதால் குடாநாட்டின் பல பகுதிகளி லிருந்தும் குடாநாட்டு மத் தியை நோக்கியும் ஆனை யிறவுக்கு அப்பாலும் புலப் பெயர்ச்சிகள் நிகழ்ந்துள்ளன.

எனினும், இந்தப் புலப் பெயர்ச்சி, கிழக்கு மாகாணத் தில் டீ. எஸ். சேனநாயக்க ஆரம்பித்த 'குடியேற்றத் திட் டங்களை' நோக்கி அவர்களை இழுக்கவில்லை. சாதாரண சிங்களக் குடியானவர்கள் (peasantry) எவ்வளவு இலகு வில் இத்தகைய குடியேற்றத் திட்டங்களுக்கு 'எடுபடு'கி றார்களோ (அரசு ஆதரவு, அரசியல் உள்நோக்கம் இன்ன பிறவற்றை விட்டாலும்) அவ் வளவு எளிதாக குடாநாட் டார் 'எடுபடு'வதில்லை.

சமூகவியல் ரீதியில், குடா நாட்டுக் குடியானவர்களின் வர்க்க நிலை, சொந்தமாக உள்ள நிலம் போன்ற பல காரணிகளால் இதனை விளங் கப்படுத்த முடியுமென்றாலும் குடாநாட்டுத் தமிழர்களின் புலப்பெயர்ச்சிசுவாரசியமான சமூக மானிடவியல் ஆய்வுக்கு உட்படுத்தத் தகுந்தது என்ப தில் இரு கருத்துக்களிருக்க முடியாது.

எண்பத்து மூன்றுகளுக்கு பிற்பாடு ஏற்பட்ட மேற்கு ஐரோப்பாவை நோக்கிய புலப் பெயர்ச்சி அளவிலும் தரத்திலும் முன்னைய புலப்பெயர்ச்சி களை விட வேறுபட்டது. எண்பதுகளுக்கு முன்பாக மேற்கு ஐரோப்பாவுக்கு குறிப் பாக ஐக்கிய ராச்சியங்களுக்கு (U.K.) சென்றவர்கள் உயர் வர்க்க / உயர் சாதியினர் என் பது பெருமளவில் உண்மை. அரச யந்திர அடக்கு முறை யின் அகோரம் எண்பத்து மூன்றிற்குப் பிறகு எல்லா வர்க்கத்தினரையும், எல்லாச் சாதியினரையும் மேற்கு நோக்கிப் புலம்பெயர வைத் தது.

இது தமிழ் மக்களைப் பொறுத்து மட்டும் குறிப்பான விடயமில்லை. உலகடங்கிலும் எங்கெங்கு விடுதலைப் போராட்டங்களும், யுத்தங் களும் இடம் பெறுகின்றதோ அங்கங்கிருந்தெல்லாம் ஒரு தொகுதி மக்கள் பலவழிகளி லும் புலம் பெயரத் தான் செய்கிறார்கள்.

இந்தப் 'புலப்பெயர்ச்சியி னால் ஏற்படுகிற விளைவு களை எவ்வாறு அதிகபட்சம் தமிழ்ச் சமுதாயத்துக்குப் பயன் தரும் வகையிலும் வளம் சேர்க்கும் வகையிலும் ஆற்றுப்படுத்தலாம் என்பது குறித்து அக்கறை கொண் டோர் அனைவரும் சிந்திக்க வேண்டும்.

ஒரு சில உதாரணங்கள் இங்கு போதுமானது. ஆங்கி லம் மட்டும்தான் தெரிய வேண்டும் என்ற நிலை எமக்கு இன்று இல்லை. பிரெஞ்சு, ஜேர்மன், ஸ்கண்டி னேவிய மொழிகள், அரபு போன்ற பல மொழிகளிலும் ஆளுமை மிக்க பலரை நாம் இன்று இனங்கண்டு சொள்ள முடியும். இந்தப் பிறமொழிக ளுடனும் தமிழுடனும் மட் டுமே பரிச்சயம் கொண்ட ஒரு தலைமுறை உருவாகி விட் டது; மேலும் தலைமுறைகள் உருவாகப் போகின்றன.

புலம் பெயர்ந்து இருக்கும் தமிழர்கள் தங்களுடைய மொழியை இழக்காமலும் அதே நேரம் மற்றைய மொழி யில் பலம் வாய்ந்த ஆளுமை யுடைய தலைமுறையை உரு வாக்கினால் (உருவாக்க வேண் டும்) பாரதியின் வேண்டு கோளை, "சென்றிடுவீர் எட்டுத் திக்கும்; கலைச் செல் வங்கள் யாவும் கொணர்ந் திங்கு சேர்ப்பீர்" என்பதை நாம் நிறைவேற்றலாம்.

எட்டுத் திக்கும் சென்றா யிற்று! கொலைச் செல்வங்க ளுக்கு பதில் கலைச் செல்வங் களைக் கொண்டு வந்து சேருங்களேன் தயவு செய்து!

## சென்றிடுவீர் எட்டுத்திக்கும்..




நன்றி - நூலகத்திட்டம்





அணிவகுப்பில் மகளிர்.




# பெண்கள் இயக்க மாநாடு - '90

இந்தியப் பெண்கள் இயக்கத்தின் நான்காவது தேசிய மகாநாடு கடந்த மார்கழி மாதம் 28-31 வரை இந்தியாவின் கேரள மாநிலத்தில் உள்ள கோழிக் கோடு என்னும் ஊரிலே நடைபெற்றது. ஏறத்தாழ 160 அமைப்புக்களைச் சேர்ந்த 2500 பிரதிநிதிகள் இதில் கலந்து கொண்டார்கள்.

இம் மகாநாடு முற்று முழுதாக தனியாரின் நன்கொடைகள் மூலம் திரட்டப்பட்ட பணத்தினுதவியுடன் நடாத்தப்பட்டது. நாடளாவிலும் உள்ள பெண்கள் அமைப்புக்களின் பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு ஒருங்கிணைப்புக் குழு இதனை ஒழுங்கு செய்திருந்தது. கூட்டத்தின் ஆரம்ப வைபவம் மிகவும் புதுமையான முறையில் நடைபெற்றது. வழமையான வைபவங்கள், பேச்சுக்கள் ஆகியவற்றிற்குப் பதிலாகப் பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த பெண்கள் பாடல்கள் பாடியும் நடனங்கள் ஆடியும் ஆரம்பித்து வைத்தார்கள். முழு மகாநாடும் இவ்வாறு முறைசாராத (informal) வகையில் விவரணம், பாட்டு, நாடகங்கள் மூலம் கருத்துக்களையும் அனுபவங்களையும் பகிர்வதாக அமைந்தது.

விவாதத்திற்கு எடுக்கப்பட்ட ஒன்பது தலைப்புக்களில் அடிப்படைவாதம் (fundamantalism), இனவாதம் , சாதிவாதம் ஆகியன முக்கிய இடத்தைப் பிடித்தன. சர்வதேச பெண்கள் தினத்தை (பங்குனி 8ம் திகதி) இனவாதத்திற்கு எதிரான நாளாகவும் பிரகடனப் படுத்தினார்கள். விவாதத்திற்கு எடுக்கப்பட்ட விடயங்களில் சில வருமாறு -

## பெண்களும் வன்முறையும்

இவ்விவாதம் பின்வரும் ஐந்து வகையான வன்முறைகளை மையமாகக் கொண்டிருந்தது - அரசு, மதம்/இனம், இல்லறம், பாலியல், உளவியல். சித்திரா என்னும் 15 வயதுச் சிறுமி தனக்கு நிகழ்ந்த பாலியல் வன்முறையை மற்றவர்களுடன் பேசிப் பகிர்ந்து கொண்டதன் மூலம் "ஒரு பாறாங்கல்லை இறக்கி வைத்தது போலிருந்தது" எனக் கூறினாள்.

தேவாலயமும் பல கன்னியாஸ்திரிகளின் விமர்சனத்திற்கு உள்ளாகியது. கீழ்படிவான, பணிந்து போகும் பெண்களை உருவாக்குவதில் தேவாலயம் வகிக்கும் பங்கு சுட்டிக் காட்டப்பட்டது. அண்மைக் காலத்தில் அது எவ்வாறு 4 கன்னியாஸ்திரிகள் பாலியல் வன்முறைக்கு இலக்காகிய போது அதனை மூடி மறைக்க முயன்றது என்பதும் கண்டிக்கப்பட்டது.

ராமஜென்மபூமி விவகாரத்தில் வன்முறையில் இறங்கப் புறப்பட்ட 10,000 ஆண்களை எவ்வாறு ஒரு பெண்கள் அமைப்பைச் சேர்ந்த பெண்கள் தடுத்து நிறுத்தினார்கள் என்றும், கிரமமான முறையில் அரசியல் மயப்படுத்தப்பட்டதினாலேயே அப்பெண்களால் அதனை சாதிக்க முடிந்தது எனவும் கூறப்பட்டது.

## பெண்களும் சட்டமும்

ஒரு பெண் விவாகரத்துப் பெறுவதற்கு நீண்ட காலம் பொறுத்திருப்பதைத் தவிர்க்கும் வகையில் "இல்லற வன்முறைச் (domestic violence) சட்டம்" இயற்றப்பட வேண்டும் என ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மேலும், நீதி மன்றங்களின் நோக்கம் பால் நீதியை (gender justice) நிலை நிறுத்துவதேயன்றி குடும்பம் எனும் அமைப்பை பேணுவதல்ல எனவும் கூறப்பட்டது.

## பெண்களும் பெண்நிலை வாதமும்

இந்தப் பட்டறை இந்திய திட்டமிடும் மாதிரியை ஆராய்ந்தது. இம்மாதிரி பால் வேறுபாட்டைக் கருத்தில் கொள்ளாது. எவ்வாறு சமூகப் பிரச்சனைகளான நீர், எரிபொருள், சூழல் மாசடைதல் என்பவற்றை "பெண்கள் பிரச்சினை" என ஒதுக்குகின்றது என்பது எடுத்துக் காட்டப்பட்டது. பால் ரீதியான தொழிற் பிரிப்புப் பற்றி பேசுகையில், வருமானம் உழைக்கும் பொருட்டுப் பெண்களை மரபு ரீதியான தொழில்களில் ஈடுபடுத்தவது, அவர்களுக்கு அது தொழில் வாய்ப்பைப் பெற்றுத் தரும் நுழைவாயிலாக இருக்க வேண்டுமேயொழிய, அதுவே முடிந்த முடிவாக இருக்கக் கூடாது.

நகர சபை ஆசனங்களில் முப்பது வீதத்தினைப் பெண்களுக்கு ஒதுக்குவது பற்றியும் விவாதிக்கப்பட்டது. இதன் முடிவில், பெண்கள் அமைப்புக்கள் தேர்தல் பொறிக்குள் சிக்கி விடாமல் போராட்டங்களிலும் பெண்களை ஒருங்கிணைப்பதிலும் தமது கவனத்தைச் செலுத்த வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது.

## பெண்களும் வெகுஜனத் தொடர்பும்

விளம்பரங்களில் பெண்கள் எவ்வாறு கேவலப்படுத்தப்படுகிறார்கள் என்பது ஆராயப்பட்டது. "surf" எனும் சவர்க்காரம் தொடர்பான சர்ச்சை பற்றிப் பேசப்பட்டது. இவ்விளம்பரம் சரியானது என வாதாடிய விளம்பரக் கம்பனி, பெண்களை மனையாளாகவும் தாயாகவும் மட்டும் பார்த்துப் பழகிய மக்களுக்கு, இப்பழக்கப்பட்ட பாத்திரத்தை மாற்றினால் சவர்க்கார விற்பனை வீழ்ச்சியடைந்து விடும் என்ற காரணத்தைக் காட்டியது.

வெகுஜன தொடர்புச் சாதனங்கள் எவ்வாறு மத அடிப்படைவாதத்தை, ஸ்திரப்படுத்த உதவுகின்றன என்பது மகாபாரதம், இராமாயணம் ஆகிய இரண்டு தொலைக்காட்சி தொடர்களை உதாரணமாகக் கொண்டு எடுத்துக் காட்டப்பட்டது. இவையிரண்டும் எவ்வாறு பெரும்பான்மையினரின் கலாச்சார பாரம்பரியங்களை முழு தேசத்தினுடையதுமாக காண்பிப்பதுடன் பெண்கள் தொடர்பாக அடிப்படைவாதப் பார்வையையும் முன் வைக்கின்றன. இரண்டு காப்பியங்களுமே வன்முறையின் மூலம் பிரச்சினைகளைத் தீர்க்கலாம் எனக் கூறுவதுடன் ஒரு தேசத்தின் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பது ஆண்களின் வேலை என்பதையும் சித்தரிக்கின்றன. இவ்வாறு வன்முறையை ஏற்றுக் கொள்ளுதல், இந்து அடிப்படைவாத அமைப்புக்கள் தமது "தூய்மையான கடமைகளை" நிறைவேற்ற வன்முறையை பாவித்தலை நியாயப்படுத்த உதவுகின்றது.

## பெண்களும் அரசியலும்

சுயாதீன (autonomous) பெண்கள் அமைப்புக்கள் எவ்வாறு தனிப்பட்ட விடயங்களை பொது விடயங்களுக்குத் தொடர்புபடுத்துவதன் மூலம் (linking the personal to the political) அரசியலுக்கு ஒரு புதுப் பரிமாணத்தை உருவாக்கலாம் என்பது தெரிவிக்கப்பட்டது. அத்துடன் அரசை நாம் எப்படி நோக்குகின்றோம் என்பதைப் பொறுத்தே நாம் கோரிக்கைகளை முன் வைக்கும் போது அது பெண்கள் அமைப்புக்களையா அல்லது அரசின் ஆதிக்கத்தையா ஸ்திரப்படுத்தும் என்பதும் அமையும்.

அடிப்படைவாத, இனவாத அரசியல் கொள்கைகளினால் அரசின் சட்டபூர்வத் தன்மையே கேள்விக்குரிய விடயமாக அமையும் இவ்வேளையில், பெண்கள், வலதுசாரிக் கட்சிகளிலிருந்தும் வலதுசாரி அரசியலில் இருந்தும் பிரித்துத் தன்மை இனங் காட்டிக் கொள்ளுதல் முக்கியமாகின்றது.

சுயாதீன பெண்கள் அமைப்புக்களுக்கும் இடதுசாரிக் கட்சிகளுக்கும் இடையே நிலவும் தொடர்பு பற்றி மிகவும் நீண்ட விவாதங்கள் நடைபெற்றன. முதலிலே சுயாதீன பெண்கள் அமைப்புக்கள் என்றால் என்ன என்பதற்கு வரைவிலக்கணம் கூற முயற்சிக்கப்பட்டது. அதாவது பரந்துபட்ட இயக்கம், அரசு, வெளிநாட்டு நிதி நிறுவனங்கள் அல்லது கட்சிகள் - இவற்றில் எதில் இருந்து சுயாதீனமாக இயங்க வேண்டும் என்பது பற்றி ஆராயப்பட்டது. இடதுசாரிக் கட்சிகளினதும் பெண்கள் அமைப்புக்களினதும் குறிக்கோள்கள் ஒத்தவையாக இருக்கும் வரை, பொது விடயங்களில் ஒருங்கிணைந்து தந்திரோபாயங்களை வகுத்தல் சுலபமாக இருக்கும். தொடர்ந்து இடதுசாரிக் கட்சிகளும் பெண்கள் அமைப்புக்களும் விவாதங்களை நடாத்துவதன் மூலம் அவநம்பிக்கைகளை நீக்கி புரிந்துணர்வை ஏற்படுத்தலாம்.

இடது சாரிக் கட்சிகளைப் போன்றே சுயாதீன பெண்கள் அமைப்புகளுக்குள்ளேயும் காணப்பட்ட பல்வேறு அரசியல் போக்குகள் இனங்காணப்பட்டதுடன் மரபுரீதியான இடதுசாரிக் கட்சிகளுக்கும் (CPI, CPM ஆகியன) புரட்சிகர இடதுசாரிக் கட்சிகளுக்கும் இடையிலான வித்தியாசங்களும் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டன.

சுயாதீன பெண்கள் அமைப்புக்களும் இடதுசாரிக் கட்சிகளும் தமக்கிடையில் நெருக்கமான வரலாற்றுத் தொடர்புகளை கொண்டுள்ளன என்பதை மறுக்க முடியாது. சுயாதீன பெண்கள் அமைப்புக்கள் இடது சாரிக் கட்சிகளில் இருந்தே உருவாகின. அத்துடன் இடது சாரிக் கட்சிகளும் இவ்வாறான சுயாதீன பெண்கள் அமைப்புக்களின் தோற்றத்துடன் கூடவே ஆண் ஆதிக்கம் பற்றி சிந்திக்க வேண்டி இருந்தது.

கேரளாவில் இடதுசாரிக் கட்சிகள் ஆட்சியில் இருந்த போதும் CPI, CPM ஆகிய கட்சிகளுடன் தொடர்புடைய உறுப்பினர்கள் எவருமே மகாநாட்டுக்கு வருகை தரவில்லை. இவர்கள் கூட்டத்தை வெளிப்படையாகப் பகிஷ்கரித்து மட்டுமன்றி அதனைப் "பூர்சுவா-பெண்நிலைவாதிகளின்" கூட்டம் எனவும் வர்ணித்தனர்.



நன்றி - நூலகத்திட்டம்



# சிங்களக் குடியேற்றங்களின் தன்மைகளும் விளைவுகளும் - 2

சேம்பாட்டான்

• வியாபாரக் குடியேற்றங்கள்:

இவ்வகையான குடியேற்றத்தினால் திருமலைப் பட்டினமே. கூடுதலாகப் பாதிக்கப்பட்டுள்ளது. திருமலை மரக்கறிச் சந்தை முழுவதுமே இன்று சிங்களவர் கைக்குச் சென்றுவிட்டது. திருமலை பஸ் நிலையத்தில் பெட்டிக்கடைகளுடன் இருந்த சிங்களவர்கள் எவ்வித அனுமதியுமின்றி நிரந்தரக் கடைகளை அமைத்துள்ளனர். இவர்களை அகற்றுவதற்கு திருமலை நகர சபை தீர்மானித்து நடவடிக்கை எடுக்க முயன்றும் கூட அரசின் தலையீட்டினால் அது தோல்வியிலேயே முடிந்தது. இதனை விட கல்முனையில் அமைக்கப்பட்ட நவீன மாடிச்சந்தையில் கணிசமான பங்கு சிங்களவர்கட்கு வழங்கப்பட்டுள்ளது.

## மீனவர் குடியேற்றம் :

தமிழ் பேசும் மக்களுடைய பிரதான பொருளாதாரங்கள் விவசாயமும் மீன்பிடியுமேயாகும். இவ்விரண்டிலும் ஊடுருவுவதன் மூலம் தமிழ்பேசும் மக்களின் பொருளாதாரத்தைச் சிதைக்க சூழ்ச்சிகள் திட்டமிடப்பட்டு திரைமறைவில் நடைபெறுகின்றன. தமிழ் பேசும் மக்களின் மீன்பிடித்தொழில் முயற்சியைச் சிதைப்பதற்காக கொக்கிளாய், புன்னன்குடா, நாயாறு போன்ற இடங்களில் சிங்கள மீனவர் குடியேற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதனைவிட அம்பாறை மாவட்டத்தினுள் சேனநாயக்கா சமுத்திரத்திலும் ஏனைய குளங்களிலும் நன்னீர் மீன்பிடித் தொழில் செய்த தமிழ் பேசும் முஸ்லிம்கள் சிங்களவர்க்ளால் விரட்டியடிக்கப்பட்டுள்ளனர். மேலும் இதே மாவட்டதில் அறுகம்பை, உல்லே, எவவை போன்ற இடங்களில் உள்ளூர் மீனவர்களுக்கென அரசாங்கத்தால் அமைக்கப்பட்ட மீனவர் குடியேற்றத்துக்கான வீடுகளில் காலி, மாத்தறை போன்ற இடங்களில் இருந்து கொண்டு வரப்பட்ட சிங்களவர்கள் குடியேற்றப்பட்டுள்ளனர்.

## முப்படையினருக்கான குடியேற்றங்கள் :

முப்படையினரும் தளம் அமைத்திருக்கும் திருகோணமலையில் ஒவ்வொரு படைப் பிரிவினரும் தாம் தங்கியிருக்கும் இடங்களிலிருந்து வேறாக தமக்கு வசதியான இடங்களில் பண்ணைகளை அமைத்துள்ளனர். அல்லை -கந்தளாய் வீதியில் இராணுவத்தினரின் புகையிலைப் பண்ணையும், கடவானையில் கடற்படையினரின் விவசாயப் பண்ணையும் இருக்கின்றன. இவற்றில் வேலைக்குச் சிங்களவர்களே அமர்த்தப்பட்டுள்ளனர். அவர்களுக்கு முப்படையினரின் வாகன வசதிகள் இங்கு கிடைக்கின்றன். இது பல வகையிலும் சிங்கள குடியேற்றங்களை வலுவுடையன வாக்குகின்றன.

## புனித பிரதேசக் குடியேற்றம் :

### 1. தீகவாபி

தீகவாபி புனித அபிவிருத்தித் திட்டம் என்ற பெயரில் முஸ்லிம்களுக்குச் சொந்தமான 997 ஏக்கர் காணி அரசினால் பறிக்கப்பட்டுள்ளது. இப்பிரதேசத்தில் முஸ்லிம் மக்கள் பன்னூறு ஆண்டு காலமாக விவசாயத்தில் ஈடுபட்டு வருகின்றனர். காலஞ்சென்ற அல்ஹாஜ் ஏ.எம்.ஏ.அஸீஸ் அவர்கள் கல்முனைப்பகுதியில் உதவி அரசாங்க அதிபராக இருந்தபோது இப்பகுதியில் விவசாயம் செய்த மக்களுக்கு தற்காலிக அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டன. அதன் பின்னர் கல்லோயா அபிவிருத்தி சபையாலும் பின்னர் ஆற்றுப்பள்ளத்தாக்கு அபிவிருத்திச் சபையாலும், பின்பு மாவட்ட அரசாங்க அதிபரினாலும் அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டன. இருப்பினும் தத்தாகதி மகாசம்புத்த பிரான் தீகவாபிக்கு விஜயம் செய்து 500 பிக்குகளுடன் தியானத்தில் அமர்ந்துள்ளார். ஆதலால் இப்பிரதேசத்தை புனித பிரதேசமாக அபிவிருத்தி செய்ய வேண்டுமென்று கூறி காணிகளை அரசினர் அபகரித்துள்ளனர். இதற்கு முன்னரே 1968ல் ரணதுங்க கமிட்டியின் தீர்மானப்படி தீகவாபியில் 585 ஏக்கர் காணி சுவீகரிக்கப்பட்டது. சுவீகரிக்கும் போது இனிமேல் இவ்விடங்களில் காணி சுவீகரிப்பதில்லை என வாக்குறுதி கொடுத்திருந்தனர். ஆனால் மீண்டும் வாக்குறுதியை மீறி காணிகளை சுவீகரித்துள்ளனர். காணிகளை இழந்த மக்களுக்கு வேறு இடங்களில் காணி கொடுப்பதாகக் கூறியும் இதுவரை கொடுக்கப்படவில்லை. வேறு இடங்களில் காணி கொடுப்பது கூட இந்நிலச்சூறையாடலுக்கு தீர்வாக மாட்டாது. இதுவரை அம்பாறை மாவட்டத்தில் 10,250 ஏக்கர் புராதன முஸ்லிம்களின் காணிகள் சூறையாடப்பட்டுள்ளன.

### 2. சேருவல புனித நகர்த் திட்டம் :

தமிழ் முஸ்லிம்களின் தொகுதியான மூதூரில் அடங்கியிருந்த சேருவல 1976 ஆம் ஆண்டு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சியின் போது தனித் தொகுதியாகப் பிரிக்கப்பட்டது. திருமலை மாவட்டத்தில் அடங்கியிருந்த மொத்த நிலப்பரப்பில் 3/5 பங்கை சேருவல தொகுதி அடக்கிக் கொண்டது. 1977 இலிலிருந்து இன்று வரை யு.என்.பி. ஆட்சியில் இது புனித நகர்த்திட்டம் மூலம் மிகப் பெரிய நகராக மாற்றப்பட்டு வருகின்றது. திட்டமிட்டு வேறு மாவட்டத்தைச் சேர்ந்த பெருந் தொகையான சிங்கள மக்கள் இங்கு குடியேற்றப்பட்டுள்ளார்கள். இதன் மூலம் இனி நடக்கப் போகும் மாவட்ட ரீதியிலான தேர்தலின் கீழ் இம்முஸ்லிம்கள் தமக்குரிய பிரதிநிதித்துவத்தை இழக்கும் அபாயத்தில் இருக்கின்றார்கள். தீகவாபி, சேருவல புனித நகர்த்திட்டம் போலவே திரியாய் புனித நகர்த்திட்டம் மூலமும் தமிழ் முஸ்லிம்களின் காணிகள் பறிக்கப்பட்டுள்ளன.

## தமிழ்ப் பிரதேசத்துடன் சிங்களப் பிரதேசத்தை இணைத்தல் :

குடியேற்றப்பட்ட மாவட்டங்களில் தங்கள் எண்ணிக்கையைக் கூட்டி குறிப்பிட்ட மாவட்டத்தின் அரசியல் அதிகாரத்தினை தாங்கள் கைப்பற்றுவதே இவ்விணைப்பின் முக்கிய நோக்கம் ஆகும். இதன்படி அம்பாறை மாவட்டத்துடன், முன்னர் மொனராகலை மாவட்டத்துடன் இணைந்திருந்த இரண்டு பிரதேசங்களான மகாஓயாவும் பதியத்தலாவையும் இணைக்கப்பட்டன. இதனால் பதியத்தலாவையில் 13,501 பேரும், மகாஓயாவில் 13,018 பேரும் அம்பாறை மாவட்ட பிரஜைகளாயினர். இதன் மூலம் விகிதாசார பிரதிநிதித்துவ தேர்தலின்படி கூடிய உறுப்பினர்களை தாங்கள் பெற்று அம்பாறை மாவட்டத்தின் அரசியல் அதிகாரத்தினை தாங்கள் கைப்பற்றி அம்மாவட்டத்தை சிங்கள மாவட்டம் ஆக்கும் முயற்சியில் அரசு இறங்கியுள்ளது. இம்முயற்சியில் பெரிய வெற்றிகளையும் அவர்கள் பெற்றிருக்கின்றனர். அவ்வெற்றியின் பெறுபேறே 1947 ஆம் ஆண்டு 3000 ஆகக் காணப்பட்ட சிங்களவர் எண்ணிக்கை இன்று 1,46,371 ஆக அதிகரித்துள்ளது. முஸ்லிம் மாவட்டத்திலேயே முஸ்லிம்கள் சிறுபான்மையினராகி பலமற்ற இனக்குழுவாக சிதையும் அபாயம் தோன்றியுள்ளது.

## குடியேற்றும் போது மேற்கொள் ளும் தந்திரோபாயங்கள் :

குடியேற்றங்களை மேற்கொள்ளும் போது மிகச் சிறந்த தந்திரோபாயங்களை இவர்கள் மேற்கொள்கிறார்கள். அவையாவன :

1. நீர்ப்பாசன வசதியுள்ள இடங்களில் குடியேற்றி நீர்ப்பாசன ஆதிக்கத்தை தங்கள் கையில் வைத்திருத்தல். இதனை கல்லோயா கந்தளாய், அல்லை, பதவியா போன்ற திட்டமிட்ட விவசாயக் குடியேற்றங்களில் நாம் கண்டு கொள்ளலாம். கல்லோயாத் திட்டத்தில் பெயருக்காக சில குடியேற்றக் கிராமங்கள் தமிழ் பேசும் மக்களுக்கு கொடுக்கப்பட்ட போதும் அக்கிராமங்கள் ஒன்றில் நீர்ப்பாசன வசதி அற்றதாகவோ அன்றி சிங்களக் கிராமங்களினூடு நீர்ப்பாசனம் செல்வதாகவோ இருந்தன.

2. குடியேற்றங்களை அருகிலுள்ள சிங்கள மாவட்டங்களுடன் போக்குவரத்து வசதி செய்யக் கூடியதாக அமைத்தல். உதாரணம் : திருமலை மாவட்டத்தில் அமைக்கப்பட்ட குடியேற்றங்கள் பொலன்னறுவை மாவட்டத்துடனும் அநுராதபுரம் மாவட்டத்துடனும் போக்குவரத்து வசதி செய்யக் கூடியதாக அமைக்கப்பட்டன.

( தொடரும் )

---

## ஈமானைக் கொன்ற...

நூறுல் ஹக் அவர்கள் எனது கருத்தை ஆழமாக யோசிக்காமல் நுனிப்புல் மேய்ந்ததால் வந்த விளைவே இது.

உதாரணதாக, நூறுல் ஹக் அவர்கள் மூன்று நேரமும் மாட்டிறைச்சி சாப்பிடுகிறார் என்று வைத்துக்கொண்டால் அந்த மூன்று நேர மாட்டிறைச்சி அவரது உயிரைப்பாதுகாக்கும் என்ற நம்பிக்கையில் அந்த உணவை உன்றிருப்பாரா? இன்னுஞ் சில உதாரணங்களை நண்பருக்கு விளங்கப் படுத்தலாம்.

'பதிர்' யுத்தம் இஸ்லாமிய ஆரம்ப வரலாற்றில் ஆயுதப்பயிற்சி, ஆயுதத் தரிப்பு ஆகியவற்றில் நம்பிக்கை வைத்திருந்த அரபிகளுக்கும், அல்லாஹ்வை மாத்திரம் நம்பிக்கை கொண்ட அரபிகளுக்குமிடையில் நிகழ்ந்த முதலாவது யுத்தமாகும்.

ஆயிரத்துக்கு அதிகமான போர்வீரர்களைக் கொண்ட அரபிப்படையினரில் போர்த்திறமை, அனுபவம், சக்தி வாய்ந்த ஆயுதங்களில் நம்பிக்கை வைத்தால் போதும் அவைகளே வெற்றியைத் தரும் என்ற நம்பிக்கை இருந்தது. மறுபுறத்தில், முஸ்லிம்களிடத்தில், ஓரளவு ஆயுதங்களும் பயிற்சியும் இருந்தாலும் அவைகளில் ஒரு துளியேனும் நம்பிக்கை வைக்காது முற்றிலும் அல்லாஹ்விலேயே தமது பாதுகாப்புக்கும் வெற்றிக்கும் நம்பிக்கை வைத்திருந்தனர். இறுதியில் முஸ்லிம் முன்னூற்றி பதிமூன்று பேராக இருந்தாலும் அல்லாஹ்வின் பாதுகாப்பில் அசையாத நம்பிக்கை வைத்ததால் வெற்றியடைந்தனர். சிறிது காலத்தின்பின்னர் நடைபெற்ற உஹது யுத்தத்திலே முஸ்லிம்கள் தோல்வியடைந்தனர். காரணம், அல்லாஹ்வின் மீதான நம்பிக்கை குன்றியமையாகும்.

இச்சம்பவங்களிலிருந்து இரு முடிவுகளுக்கு வரலாம்:

பதிர் யுத்தத்தில் முஸ்லிம் வீரர்கள் அல்லாஹ்விலும் ஆயுதத்திலும் நம்பிக்கை கொண்டிருந்தனர். அதாவது ஆயுதத்தினூடாக, அல்லாஹ் வெற்றியைக் கொடுப்பான் என நம்பியிருந்தார்கள்.

அல்லது அல்லாஹ்வில் மாத்திரம் நம்பிக்கை கொண்டு தமது பாதுகாப்புக்கு அல்லாஹ் மாத்திரமே போதுமானவன், ஆயுதப் பயிற்சியும் ஆயுதத் தரிப்பும் அல்லாஹ்வில் முற்றிலும் நம்பிக்கை வைக்காமல் வெற்றியைத் தராவென நம்பினார்கள்.

முதலாவது கருத்துக்கு நூறுல் ஹக் மறுப்பு தெரிவிக்க மாட்டார்.* காரணம் அவரது பதிலுரையில் ஆயுதத்தினூடாக அல்லாஹ் பாதுகாப்பளிக்கிறான் எனவும் அதுவே தௌஹீதெனவும் கூறியிருக்கிறார். ஆயுதங்களினூடாக எல்லாம் வல்ல இறைவன் பாதுகாப்பளிப்பதில்லை. மாறாக, மலக்குகள் மூலமாகவே தமது விசுவாசிகளுக்கு பாதுகாப்பளிப்பான். இதுதான் பதிர் யுத்தத்திலும் நடந்தது. நூறுல் ஹக் போன்றவர்கள் இன்றைய முஸ்லிம் சமுதாயத்தில் மலிந்துள்ளதால் அல்லாஹ்வின் பாதுகாப்புக்கு நாங்கள் அருகதை பெறுவதில்லை.

மேற்குறிப்பிட்ட இரு கருத்துகளுக்கு முரணான இன்னொரு கருத்தும் உள்ளது. அஃதாவது, ஒரு சமூகத்தின் பாதுகாப்புக்கு முழுக்க முழுக்க ஆயுதத்தில் நம்பிக்கை வைத்து அதை வழிபடுவதாகும், ஒரு சில தமிழ விடுதலை இயக்கங்கள் இந்த வழிபாட்டைத்தான் இன்று கைக்கொண்டுள்ளன. உதாரணமாக, சரிநிகர்-5 இதழில் 2ம் பக்கம் மெல்லத் தமிழினி என்ற தலைப்பின் கீழ் பிரசுரிக்கப்பட்ட ஒரு சிறு குறிப்பு பின்வருமாறு கூறுகிறது.

யாழ்ப்பாணத்தில், நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில், தமிழ் மக்கள் ஆயுதங்களை வழிபட வேண்டிய காலம் இது வென்றும் அவர்களை அதுவே பாதுகாக்கின்றது. என்றும் கருத்துப்பட தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர்களில் ஒருவரான் யோகி ஒரு தடவை பேசியிருந்ததாக ஒருகுறிப்பு வெளியாகியுள்ளது.

எனவே, ஒரு சமூகத்தின் பாதுகாப்புக்கு முற்றிலுமோ அல்லது அரைகுறையாகவோ ஆயுதங்களில் நம்பிக்கை வைப்பது இறைவனுக்கு இணை வைக்கும் கொடும் பாவத்திற்கு ஒப்பாகும். மாறாக இறைவன் மீது முற்றிலும் நம்பிக்கை வைத்து பாதுகாப்பு கோருவது உண்மையான தௌஹீ தாகும் என்பது ஐயம் திரிபற நிரூபணமாகின்றது. மேலும், ஆயுதத்தரிப்பும், ஆயுதப்பயிற்சியும் இஸ்லாத்தில் விதந்துரைக்கப்பட்டது எதிரிகளை உளவியல் ரீதியாக (Psychological fear) பயங்கொள்ளச்செய்வதற்கேயொழிய ஆயுதத்தரிப்பிலும் ஆயுதப்பயிற்சியிலும் ஒருவர் முற்றிலும் நம்பிக்கை கொள்வதற்கல்ல. இந்த விளக்கத்தை நண்பர் மேற்கோள் காட்டிய குர் ஆன் 8.60 வசனத்திலிருந்தே அறியலாம்.

"அவர் (நிராகரிப்பவர்)களை எதிர்ப்பதற்காக உங்களால் இயன்ற அளவு பலத்தையும், திறமையான போர்க் குதிரைகளையும் ஆயத்தப்படுத்திக் கொள்ளுங்கள். அவற்றினால் அல்லாஹ்வின் விரோதியையும், உங்களுடைய விரோதியையும் அவர்களல்லாத வேறு பல (பகைவ)ரையும் நீங்கள் பயப்படச்செய்து வடலாம்.

(குர்ஆன் 8.60)

எனவே, இறுதியாக மார்க்க அறிஞர்களும், சாதாரணமக்களும் வரக் கூடிய ஒரேயொரு முடிவு, ஒரு சமுகத்தின் பாதுகாப்புக்கு முற்றிலும் அல்லாஹ்வின் மீது விசுவாசம் கொள்வது-ஒரு அடிப்படைத் தகைமையாகும். இதுவே உண்மையான முஸ்லிம் கொள்ள வேண்டிய நம்பிக்கையுமாகும். இதற்கு மாறாத நூறுல் ஹக் விசுவாசம் கொள்வாராயின் அவர் நூறுல் பாத்திலாக (பொய்) மாறிவிடுவார்.

நூறுல் ஹக்கின் ஆயுதம் பற்றியவிளக்கம் இஸ்லாமியரல்லாத மக்களிடையே இஸ்லாம் பற்றிய தப்பபிப்பிராயத்தையும், எரிச்சலையும் ஊட்டியருக்குமாயின் அதற்கு நூறுல் ஹக்கின் சார்பாக மன்னிப்பு கேட்டுக் கொள்கிறேன்.

யூ. எம். நிஸார்,

---

## யத்தந்தை...

பதில்: சிங்களக் கட்சிகள் எப்போதும் தமிழ் மக்களின் விருப்பங்களுக்கு எதிரானவர்களே. அது எமக்குப் புதிது அல்ல. ஆனால் இந்தத் தமிழ் குழுக்கள் உண்மையில் சமூக விரோதக் குழுக்கள். அவர்களுக்குத் தமிழ்ப் பிரதேசங்களில் எந்த ஆதரவும் இல்லை. சர்வகட்சி மாநாட்டில் பங்கு பற்றும் பல கட்சிகளுக்கு மிகக் குறைவான நபர்களே அங்கத்தவர்களாக உள்ளனர். என்ன முக்கியமானது என்றால் எமக்கு உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் தமிழ் மக்களின் முழுமையான ஆதரவு இருக்கிறது என்பது தான்.

நன்றி - நூலகத்திட்டம்





# சரிநிகர்

இதழ் : 7 பெப்ரவரி/மார்ச்




மட்டுநகர் அன்னையர் முன்னணி

# எமது பிள்ளைகள் எங்கே?



அன்னையர் முன்னணித் தலைவி : மனோராணி

தென்னிலங்கை அன்னையர் முன்னணி அமைப்பு பெப்ரவரி மாதம் 19ம் திகதி ஏற்பாடு செய்திருந்த கண்டனக் கூட்டமும் 'காணாமல் போனோர்' நினைவு தினமும் பல் அம்சங்களில் முக்கியத்துவம் வாய்ந்தன. துணைப் பாதுகாப்பு அமைச்சருடைய 'பயமுறுத்தல்களும், எச்சரிக்கைகளும் கூட்டத்தை அதிகமாக்கவே உதவின.

சமூக இயக்கப்பாடு (social movement) என்ற அளவில் குறித்த காலகட்டங்களில் அன்னையர் முன்னணி போன்ற அமைப்புகளுக்கு ஜனநாயகம் பேணும்/மீட்கும் பணியில் முக்கியத்துவம் வாய்ந்த பங்கு இருந்தமையை ஆர்ஜெண்டினா போன்ற நாடுகளின் அனுபவங்கள் உணர்த்துகின்றன.

எனினும் இந்தச் சமூக இயக்கப் பாட்டின் வெற்றியும், தாக்கமும், தொடர்ச்சியும் எவ்வளவு தூரம் இந்த அமைப்புக்களும் இயக்கப்பாடும் தமது இறைமையைப் (Autonomy) பேணுகின்றன என்பதிலேயே தங்கியுள்ளது என்பதை வரலாறும் வடக்கு அனுபவங்களும் எமக்கு உணர்த்துகின்றன.

வடக்கு கிழக்கில் கடந்த காலத்தில் நடைபெற்ற படுகொலைகள், காணாமற் போனமைகளை எதிர்த்து வடக்கு - கிழக்கு அன்னையர்கள் " எமது பிள்ளைகளை விட்டுவிடு" என்று நடாத்திய போராட்டங்களையும், அதன் விளைவுகளையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

இலங்கை அரசு படைகளாலும், பிறகு இந்தியப் படைகளாலும், ஏன் விடுதலை இயக்கங்களாலும் தொடர்ச்சியாக அடுத்தடுத்து நடாத்தப்பட்ட தர்பார்களில் தமது அன்பிற்குரிய பிள்ளைகள் காணாமற் போவதோ, கொல்லப்படுவதோ குறித்து அவர்கள் கண்ணீர் ததும்ப நடாத்திய போராட்டங்கள் கூட ஞாபகத்திற்கு வருகின்றன.

வெவ்வேறு காலகட்டங்களில் வெவ்வேறு சக்திகள் இந்தப் போராட்டங்களில் ஒன்று சேர்ந்து தத்தமது அரசியல் லாபங்களுக்காக இந்தப் போராட்டங்களைப் பயன்படுத்தி வந்ததும் கூடவே ஞாபகத்திற்கு வராமல் இல்லை.

கொழும்பில் நடைபெற்ற அன்னையர் முன்னணியின் பொதுக் கூட்டத்தில் பங்கு கொண்ட எதிர்க்கட்சிகள் - குறிப்பாக சிறிலங்கா சுதந்திர கட்சி - கூட ஒரு காலத்தில் இலங்கையின் அன்னையர்களின் கண்ணீரை லட்சியம் செய்யாது தமது தர்பாரை நடத்தியவை என்பதை யாரும் மறந்து விட முடியாது.

வடக்கு கிழக்கினைப் பொறுத்தவரை ஆயிரக் கணக்கில் இளைஞர்கள் கைது செய்யப்பட்ட போதும், பயங்கரவாத இயக்கங்களைச் சேர்ந்தவர்கள் என்ற பேரில் படுகொலை செய்யப்பட்ட போதும், தெற்கிலுள்ள அன்னையர்கள் மத்தியில் ஒரு 'முன்னணி' அவ்வளவு தீவிரமாகவோ அக்கறையாகவோ இருக்கவில்லை. தற்போதைய அரசின் ஜே.வி. பி. காலத்தில் அதே வடக்கு கிழக்கின் கதி தெற்கிலும் ஏற்பட்ட பிறகு தான் தெற்கிலுள்ள அன்னையர்கள் ஒரு முன்னணி தோற்றுவிக்கப்படுவது குறித்து சிந்தித்திருக்கிறார்கள்.

காலம் கடந்தாவது இப்படி ஒரு முயற்சி ஏற்பட்டதை நாம் பாராட்டமல் இருக்க முடியாது. ஆனால் அதே வேளை பத்திரி கையாளர் ரிச்சட் டி சொய்சா கொல்லப் பட்ட அப்பட்டமான படுகொலை நிகழ்ச் சிக்கு முன் வடக்கிலுள்ள பத்திரிகைகள் தடை செய்யப்பட்டது, பத்திரிகையாளர் கள் கடத்தப்பட்டது, பத்திரிகைக் காரியாலயங்கள் குண்டு வைத்துத் தகர்க்கப் பட்டது என்பன கடந்த பத்தாண்டு காலத்தில் பல தடவைகள் நடந்து வந்துள்ளன என்பதை நாம் நினைத்துப் பார்க்க வேண்டும். அப்போதெல்லாம் தெற்கிலிருந்து ஒரு மனிதாபிமானக் குரல் கூட - தனிப்பட்டவர்களை விட்டுவிட்டால் - ஒலிக்கவில்லை என்பது ஒரு கசப்பான உண்மையாகும்.

வடக்கு கிழக்கில் இயங்கி - ஓரளவு சுயாதீனத்துடன் போராட்டத்தை முன்னெடுத்த - அன்னையர் முன்னணி கூட பின்னாளில் 'விடுதலை இயக்கங்களின்' கருவியாக செயல்பட நிர்ப்பந்திக்கப் பட்டன என்பதும் இந்த அன்னையர் முன்னணியின் போராட்டங்களின் உறுதியை அவை சோதனைக்குள்ளாக்கியதும் கூட கவனிக்கப்பட வேண்டும்.

யாழ்ப்பாணத்தில் ஆயிரம் மீற்றர் தடைச்சட்டத்தைப் போட்டு இராணுவ முகாம்களில் இருந்து ஆயிரம் மீற்றர் தூரத்திற்குள் இருக்கும் அனைத்து மக்களும், வெளியேற வேண்டும் என்றும், அவை தாக்குதல் பிரதேசங்கள் என்றும் அரசு அறிவித்த போது, அன்னையர் முன்னணி கச்சேரியில் ஒரு மறியல் போராட்டத்தை நடாத்தியது பலருக்கு ஞாபகம் இருக்கலாம். ஆனால் இந்த மறியல் போராட்டம் கச்சேரி மூலம் சம்பளம் வழங்கப்படும் நாட்கள் நெருங்கி வந்த போது விடுதலை இயக்கங்களால் போராட்டத்தைக் கைவிடுமாறு நிர்ப்பந்திக்கப்பட்டு கைவிடச் செய்யப் பட்டது.

கச்சேரி முன்பாக அமைதியாக மறியல் போராட்டத்தை நடாத்திய அன்னையர் முன் வாகனங்களில் ஆயுதத்துடன் வந்த இயக்கத்தினர் திடீர் கூட்டங்களை நடாத்தி தமது ஆதரவு உண்டு என அறிவித்த போதும் அது பிறகு தொடராமல் மறியல் போராட்டம் சம்பளம் வழங்க வசதி செய்யும் காரணத்திற்காக கைவிடப்பட்டது யாவரும் அறிந்த இன்னொரு கசப்பான உண்மை.

இப்போது தெற்கிலுள்ள அன்னையர் முன்னணியின் கூட்டத்திற்கு எதிர்க் கட்சிகள் ஆதரவு தெரிவித்து அதில் பங்கு பற்றும் என்ற செய்திகள் வரும் போது இவற்றிற்கும் என்ன நடக்கப் போகிறதோ என்ற ஐயம் எழவே செய்கிறது.

கேள்வி முறையற்ற கைதுகளும், படுகொலைகளுமே அன்றாட நிகழ்வாகிப் போன இன்றைய நாட்களில் அன்னையர்களின் இந்த முன்னணி தங்கள் கடந்த காலத்தைப் பரிசீலிக்கவும், காலத்தின் தன்மை கருதி தம்மோடு கூட்டுச் சேர்ந்து ள்ளவர்களை விளங்கிக் கொள்ளவும், தயாராக இருக்க வேண்டும். அல்லது கறையான் புற்றெடுக்க கருநாகம் குடிபுகுந்த கதை தான் ஏற்படும் என்பதில் ஐயமில்லை.

தவிரவும் அன்னையர்களின் இந்தப் போராட்டம் எமது நாட்டில் ஒரு போதுமே நடைமுறையில் இல்லாத ஜனநாயகத்திற்கான போராட்டம். ஆனால் ஜனநாயம் என்பது தமது கட்சிகளது நலன்களை ஆதரிப்பவர்கள் மட்டுமே என்பது தான் இங்குள்ள கட்சியின் நிலைப்பாடு. இதனால் காலத்திற்கு காலம் ஆட்சிகள் மாறியபோதும் ஜனநாயகத்திற்கான போராட்டம் இருந்து கொண்டே இருக்கிறது.

சுதந்திரக் கட்சியும், மூத்த அன்னையரான சிறிமாவோ பண்டாரநாயகாவும் இன்று ஆட்சியில் இருந்திருந்தால் இந்த ஜனநாயகப் போராட்டத்திற்கு இன்று யு. என். பியோ அல்லது சேவா வனிதா இயக்கமோ ஆதரவு செலுத்தும் நிலையே நிலவி இருக்கும் என்பதை அன்னையர் முன்னணி கவனத்தில் எடுக்க வேண்டும் என்பது எமது அவா.

சிங்கள, தமிழ், முஸ்லிம் அன்னையர்கள் தமது ஒன்றுபட்ட போராட்டத்தை நடாத்தப் போவதாக கேள்விப்படும் போது 'தேன்வந்து பாயுது காதினிலே' என்பது உண்மையே.

ஆனால் வடக்கு கிழக்கில் விமானங்கள் வீசும் குண்டுகளும், எல்.ரீ.ரீ.ஈ. என்ற பெயரில் செய்யப்படும்நூற்றுக்கணக்கான தமிழர்களின் கைதுகளும், தெற்கில் நடந்து வரும் 'காணாமற் போதல்களும்' வேறு வேறு விதமாக நியாயப்படுத்தப் படும் போது அன்னையர் முன்னணியின் ஐக்கியம் இந்த 'நியாயப்படுத்தல்களை' யிட்டு எள்ளி நகையாடுமளவிற்கு உறுதியாக இருக்க வேண்டுமே என்ற ஏக்கம் எழுவதைத் தவிர்க்க முடியவில்லை!


அன்னையர் முன்னணியின் எதிர்ப்புக் கூட்டம் பற்றிய விபரங்கள் : பக் : 8ல்



சரிநிகர் மாத இதழ், இல, 6, அலோ சாலை, கொழும்பு-3, இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கம்,(MIRJE) சார்பில் ச. பாலகிருஷ்ணனால், கொழும்பு-10, ஜும்மா மஜ்ஜிட் லேன், லிட்டில் ஸ்டார் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.